Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 143

உ.சம்ப்சரணம் ஆனி 21 ஜூலை 11 திங்கட்கிழமை (5-7-71)

ஜோன்சன்
அவுட்போட் மோட்டர்
யந்திர உதிரிப்பாகங்கள்
(6-H. P. — 20-H. P.)
எம்மிடம்
இப்பொழுது
பெற்றுக்கொள்ளலாம்.
— விஷ்ணு —
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY -5 JUL 1971

## ஸ்ரீ லங்காவின்

# நீதிமன்ற மொழி சிங்களம்!

## நேற்று மட்டும் 16 அடிப்படை தீர்மானங்கள் நிறைவேறின

### இன்னும் ஒன்றே உள்ளது

கொழும்பு.ஞாயிறு

**நீதிமன்றங்களில் மொழி, அரசியலமைப்பு நீதிமன்றம் குடியின் உரிமைகளையும் கட்டுப்பாடுகளையும் மாற்றுதல் உட்பட பதினாறு அடிப்படைத் தீர்மானங்கள் இன்று அரசியல் நிர்ணயசபையில் நிறைவேற்றப்பட்டன. இன்னும் ஒரேயொரு அடிப்படைத்தீர்மானம் மட்டுமே நிறைவேற்றப்படவுள்ளது**

ஸ்ரீலங்காவின் நீதிமன்ற மொழி சிங்களம் என்று நிறைவேற்றப்பட்ட 23-வது அடிப்படைத் தீர்மானம் கூறுகிறது. 23-வது அடிப்படைத்தீர்மானத்தின் முழு விபரம் வருமாறு:

ஸ்ரீ லங்கா எங்கணும் நீதிமன்றங்களிலும் நீதிபரிபாலனஞ் செய்வதற்கு சட்டமார்க்கமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நியாய சபைகளினதும் மொழி சிங்களமொழியாதல் வேண்டும், அதன் பிரகாரம் அந்த நீதி மன்றங்களிலும் நியாயசபைகளிலும் கையாளப்படும் வழக்குரைகள் நீதிமன்ற நடவடிக்கைகள் தீர்ப்புக்கள் கட்டளைகள் என்பனவும் நீதிமுறைச் செயல்கள் சட்ட நிறைவேற்றம் சார்ந்த செயல்கள் என்பன பற்றிய பதிவேடுகளும் உட்படவுள்ள அவற்றின் பதிவேடு சிங்கள மொழியிலிருத்தல் வேண்டும், என்னும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே ஏதேனும் கிராம நீதிமன்றம் விண்ணப்ப நீதிமன்றம் நீதவான் நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றம் ஒன்றின் விடயத்திலே தேசிய சபைதனது சட்டத்தினால் அல்லது அதன் பிரகாரம் வேறுவிதமான ஏற்பாடு செய்யலாம்,

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நீதிமன்றங்களில் தமிழ் உபயோகம் குறித்து நிறைவேற்றப் பட்டுள்ள 24-வது அடிப்படைத் தீர்மானம் வருமாறு:

அடிப்படைத் தீர்மானம் 24 — அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர்—வடக்கு கிழக்கு மாகாணங்களிலே ஏதேனும். நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னருள்ள சட்டத்தரணிகளும் விண்ணப்பகாரர்களும்,

(அ) தமது வழக்குரைகள் விண்ணப்பங்கள் பிரேரணைகள் மனுக்கள் என்பனவற்றை தமிழில் சமர்ப்பிக்கலாம். அத்துடன்,

(ஆ) நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழில் பங்குபற்றலாம்.

மேற்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் பதிவேடுகளின் பொருட்டு சிங்கள மொழி பெயர்ப்பொன்று தயாரிக்கப்பட ஏற்பாடுசெய்யப் படுதல்வேண்டும்.

### மொழி பெயர்ப்பு

இது தொடர்பாக நிறைவேறிய 25-வது அடிப்படைத் தீர்மானம் வருமாறு:

அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர்— நீதிமன்றம் ஒன்றின் அல்லது நியாய சபை ஒன்றின் நடவடிக்கைகளையறிந்து அவற்றில் பங்குபற்றுவதற்கு அங்கு உபயோகப்படுத்தப்படும் மொழியுடன் பரிச்சயமில்லாதவரான வழக்கொன்றின் கட்சிக்காரர் விண்ணப்பகாரர், [illegible]பதி ஜூரிமார் அல்லது நியாயசபை உறுப்பினர் ஒவ்வொருவரும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் நடவடிக்கைகளை அறிந்து அவற்றில்பங்குபற்றுவதற்கு வசதிசெய்வதற்காக அரசினால் வழங்கப்படும் பேச்சு மொழிபெயர்ப்பையும், மொழிபெயர்ப்பையும் பெறும் உரிமையுடையவராதல் வேண்டும் வழக்குரைகள் விண்ணப்பங்கள் பிரேரணைகள் அல்லது மனுக்கள் என்பனவற்றை நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் உபயோகப் படுத்தப்படும் மொழியிலே உத்தியோக பூர்வமாக மொழிபெயர்த்துப் பெறும் உரிமையும் சிங்களத்திலே அல்லது தமிழிலே அத்தகைய பதிவின் எந்தவொரு பாகத்தையும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளமுறைக்கு ஏற்ப பெறும் உரிமையும் அத்தகைய உரிமையிலடங்கும்.

இன்றைய அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் நடந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன திரு சி. எக்ஸ் மார்ட்டின் ஆகியோர் கலந்துகொண்டுபேசினார்கள்.

### 'அரசியலமைப்பே உயர்வானது!'

புதிய அரசியல் திட்டத்தில் அரசியலமைப்பே மிகவும் உயர்வானதாக இருக்கும் என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா ஜே ஆரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்,

தேசியசபையா அரசியலமைப்பா உயர்வானது? என்று திரு ஜே ஆர் கேட்டபோதே இவ்வாறு கொல்வின் பதிலளித்தார்,

தேசியசபையே அரசியலமைப்பை உருவாக்குகிறது ஆனாலும் அந்த அர

(8-ம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரத்தில் பஸ்விபத்து ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

உருத்திரபுரத்தில் சென்ற வெள்ளிக்கிழமை நடந்த பஸ்விபத்தொன்றில் ஒருவர் மாண்டார். மற்றும் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாமோதரம்பிள்ளை என்பவரே இவ்விபத்தில் மாண்டவராவார்.

உருத்திரபுரம் ஆறும் வாய்க்காலில் தான் இவ் விபத்து நடந்தது. இவ்விபத்தில் உருத்திரபுரம் காந்தி நிலைய நிர்வாகி திரு. சி. க. வேலாயுதபிள்ளையும் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். 22 பிரயாணிகள் காயமடைந்துள்ளனரெனத் தெரிகிறது.

கிளிநொச்சிப் பொலிசார் இவ்விபத்து பற்றி விசாரணை செய்து வருகின்றனர்.

### பெருமாள் கோயில் மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 8 மணிக்கு யாக பூர்ணாகுதி, தீபாராதனை, வேதபாராயணம், ஆசீர்வாதம், யாத்திராதானம், கும்பம் வீதிபிரதக்ஷணம் 9-15க்கு விமான அபிஷேகம். 9-45க்கு மகாகும்பாபிஷேகம். 10 மணிக்கு பரிவாரமூர்த்திகள் கும்பாபிஷேகம். இரவு திருக்கல்யாண வைபவமும் நடைபெறும் உற்சவமும் நடைபெறும்.

## சட்டங்களின் நி[illegible]யற்ற நிலைக்கு முடிவு

**—கொல்வின்**

கொழும்பு, ஞாயிறு

'புதிய அரசியல் திட்டத்தில் நீதிமன்றங்கள் சட்டங்களை வியாக்கியானம் செய்யலாமேதவிர தேசிய சபை நிறைவேற்றும் சட்டங்களை எதிர்க்கமுடியாது. இப்போதுள்ள அரசியல் திட்டத்தில் இருக்கும் சட்டங்களின் [illegible] யற்ற நிலையை இது முடிவுக்குக் கொண்டுவரும்' என்று அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் நிர்ணய சபையில் இன்று பேசுகையில் குறிப்பிட்டார். கோடீஸ்வரன் வழக்குத் தொடர்பாகப் பேசும் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

22வது அடிப்படைத் தீர்மானமும். 26வது அடிப்படைத்தீர்மானமும் ஒன்றாக விவாதிக்கப்பட்டது. ஒன்றுக்கொன்று தொடர்பான தீர்மானங்களானவையால் இரண்டும் ஒன்றாக விவாதிக்கப்பட்டன.

அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் மேலும் பேசுகையில். மாவட்டநீதிமன்றம், சுப்ரீம்கோர்ட், பிரிவிகவுன்ஸில் ஆகியவற்றின் தீர்ப்பு கோடீஸ்வரன் வழக்கில் வெளிவந்தும்கூட உத்தியோக மொழிச்சட்டம் அமுல் செல்லுபடியாகுமா? செல்லுபடியாகாதா என்பதில் ஒரு முடிவுக்குவரவில்லை. சட்டங்கள் சம்பந்தமாக நிலையற்றநிலை இருக்கும்போது எப்படிச் செயல்படமுடியும்?

இவ் விவாதத்தில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில் 29-வது அடிப்படைத் தீர்மானப்படி. அரசியல் அமைப்பு நீதிமன்றம் நிறுவுவதற்கு தாங்கள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையென்று கூறினார்.

ஆனால் இந்த நீதிமன்றங்கள் சுப்ரீம்கோர்ட்டின் கிளைகளாக இருக்கவேண்டுமென்றார். இந்த நீதிமன்றங்களுக்கு நிரந்தரமாக இரு சுப்ரீம்கோர்ட் நீதியரசர்கள் நியமிக்கப்பட்டாலும் தேவைப்படும்போது மற்றைய சுப்ரீம்கோர்ட் நீதியரசர்கள் இங்கு கடமையாற்றலாம் என்றும் கூறினார்.

திரு. சி. எஸ். மார்ட்டின் பேசுகையில் மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமாவதற்குமுன்னால் அரசியல் அமைப்பு நீதிமன்றத்தில் அது செல்லுபடியாகுமென்பதற்கு அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென்றார். கீழ்கோர்ட்டில் ஏற்படும் பிரச்னைகளை இது தடைசெய்யுமெனவும் அவர் கூறினார்.

## வரி விளம்பரம்

### தேவை

யாழ் நகரில் பிரபல வர்த்தக ஸ்தாபன மொன்றுக்கு ஆங்கிலம் பேச - எழுதத் தெரிந்த பெண் லிகிதர் தேவை. தராதரப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 3245. C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம் 3245

### வகுப்புகள்

ஆங்கில பாடத்தில் நான்காம் வகுப்பிலிருந்து எஸ். எஸ். ஸி. வகுப்பு வரையில் ரியூஷன் எடுக்கப்படும். விரும்புவோர் விளம்பர இல. 3239 C/o ஈழநாடு யாழ்ப்பாணத்திற்கு விண்ணப்பிக்கவும். 3239


## நன்றி நவிலல்

விரோதிகிருது வருஷம் ஆனி மீ 14-ந் திகதி (28 6-71) திங்கட்கிழமையன்று நடைபெற்ற எங்கள் 60-ஆண்டு நிறைவுவிழாவின்போது நேரில் சமுகமளித்தும் வாழ்த்துரைகள் வழங்கியும் சிறப்பித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.
ம. சுந்தரம்பிள்ளை தம்பதிகள். நிர். 14, கலியாணப் பிள்ளையார் வீதி தெரு. யாழ்ப்பாணம். 3248

கோட்டை, ஞாயிறு காரியக் கூட்டுத்தாபனத்தின் புதிய அதிகாரிகளை கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா நியமித்துள்ளார். இக்குழுவில் திருவாளர்கள் எம். சிவநாதன், சி. அபயசேகரா, மேஜர் இ சி டி பொன்சேகா, எக்ஸ் என் எல் பெரேரா, டி எச் என் பெரேரா, டாக்டர் ஜே டபிள்யு ஹெரத். பீ டி பொலியத்த ஆகியோர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
பி ப 2-30, 6-00 10-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
**கண்ணன் என் காதலன்**

மனோகரா (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 இரவு 6-30, 9-45
3வது வாரம்
முத்துராமன் சுந்தரராஜன் நாகேஷ் — ராஜஸ்ரீ லக்ஷ்மி, நடித்த
**நவக்கிரகம்**

ரீகல் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-00 இரவு 9-45
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
**விடிவெள்ளி**

Daily 5-15 & 7-15 P. M. Only
Primiyek Nisa
in
LET THEM LIVE
(A fascinating Animal World - Color)
ஒரு புதுமையான மிருகங்களின் உலகத்தை உங்கள் குழந்தைகளுடன் வந்து கண்டுகளிக்கத் தவறாதீர்கள்

யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
★ ஜெமினி கணேசன் ☆ விஜயகுமாரி
நாகேஷ் - ராமபிரபா - ராஜ்ஸ்ரீ - அசோகன்
நடித்த
**மனைவி**

வெலிங்டன் யாழ்ப்பாணம்
பி. ப. 2-30, இரவு 6-30, 10-00
★ சிவாஜி கணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
**பாசமலர்**

இன்று 5 7-7 திங்கட்கிழமை
யாழ். நகரில்
'லிடோ'
தியேட்டர் திறப்புவிழா
மாலை 6-00 மணிக் காட்சியுடன் ஆரம்பம்
★ சிவாஜி ★ சாவித்திரி
நடித்த
**சரஸ்வதி சபதம்**


## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டண சபை

கிளிநொச்சிச் சந்தை மைதானத்தில் மாட்டிறைச்சிக்கடை இல. 1 அமைந்து 15-7-71 தொடக்கம் 31-12-71 வரையிலான காலத்துக்குக் குத்தகையாக எடுத்து இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 12-ந் திகதி முற்பகல் 9-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/- கேள்விப்பத்திரப்பணம் (திருப்பிக் கொடுபடமாட்டாது) ரூபா 10/- செலுத்தி 12-7-71 பிற்பகல் 3-00 மணி வரை இச்சபை அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள் விண்ணப்பஞ் செய்வதின் பேரிலோ அன்றி நேரிலோ பட்டணசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சு. முருகேசு,
தலைவர்,
பட்டணசபை,
கிளிநொச்சி.

பட்டணசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
27-6-71 2889




ராஜா யாழ்ப்பாணம்
தினசரி காலை 10 30,
பி. ப. 2-30,
இரவு 6-30, 10-00
ஜெய்சங்கர் — லக்ஷ்மி
(இருவேடங்களில்)
நாகேஷ், விஜயகுமாரி
சுந்தரராஜன்
நடித்த
**மகனே நீ வாழ்க**


## அறிவித்தல்

### மின் விநியோகத் தடை

ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் நாவலர் வீதிச் சந்திக்கும் இடையில் உள்ள முஸ்லிம் கல்லூரி வீதியிலும் அதைச் சுற்றியுள்ள ஒழுங்கைகளிலும் உள்ள மின் பாவனையாளர்களுக்கு 8-7-71 திகதியிலிருந்து 25-7-71 திகதி வரை தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடைப்படும் என்பதையும்,

(2) யாழ்ப்பாண மின் நிலையத்தில் இருந்து விநியோகம் கொடுக்கப்பட்டுள்ள மருத்துவத்துறை வீதியிலும் அதைச் சுற்றியுள்ள ஒழுங்கைகளிலும் உள்ள மின் பாவனையாளர்களுக்கு 7-7-71 திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடைப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மின்சாரத் திணைக்களம்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
4-7-71. 2890

## ம. மு. கழகம் கோரிக்கை

அரியாலை, ஞாயிறு கடற்றொழில் ஆலோசனைச் சபை உறுப்பினராக யாழ். மாநகரசபை உறுப்பினரும் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜக் காரியதரிசியுமான திரு. ஏ. போல் ராஜாவை நியமிக்குமாறு பாஷையூர் மக்கள் முன்னேற்றக்கழகம் கடற்றொழில் அமைச்சரைக் கேட்டுள்ளது.


ஸ்ரீ காலிங்கன்
இருவில்
தினசரி பி.ப 6 30, 10-00
N.T. ராமராவ்-K R விஜயா
நடித்த
**லக்ஷ்மி கடாட்சம்**

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 2-30, 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
நடித்த
**சாரதா**


## 'மாணவர் மன்றத்தின் அவசியம்'

யாழ்ப்பாணம், திங்கள் 'மாணவர் மன்றங்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் நிறுவப்படவேண்டும். மாணவர் மன்றங்கள் மாணவர்களின் இயற்கை ஆற்றல்களை கூச்சமின்றி வெளியிடவும் பொது மேடைகளில் கூச்சமின்றிப் பேசவும் தயார் செய்கின்றன. சில பாடசாலைகளில் மாணவர் மன்றங்கள் நிறுவப்படுவதில்லை. ஆனால் எமது புதிய அதிபர் ஒருமாதத்திற்குள்ளேயே மாணவர் மன்றத்தை ஆரம்பித்தது பாராட்டுக்குரியது".

இவ்வாறு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய ஆசிரியர் சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினம் மேற்படி வித்தியாலய மத்திய வகுப்பு மாணவர் மன்றத்தை ஆரம்பித்து வைக்கும்போது கூறினார்.

—

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 5—7—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9 00)

344 மீ. அல்லது 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இறிஸ்தவ நற்சிந்தனை. 6-20 துதிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசை வேளை, 8-00 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அல்லது 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 சதம்ப இசை.

344 மீ. அல்லது 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 கல்விச்சேவை

இரவு 6-10 மெல்லிசை, 6-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 6-30 கதைநாடகம், 7-00 பழஞ் சுவைகள், 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 ஐ. நா. பற்றிய உரைநிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விஞ்ஞானஉரை, 9 40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.


இன்று மகத்தான ஆரம்பம்!

**ராணி சினிமா**

(யாழ்ப்பாணம்)

தினசரி பி.ப. 2-30, 6-30, இரவு 10-00

ஏ. வி. எம். ராஜன் — புஷ்பலதா
சுந்தரராஜன் - முத்தையா - சோ
கண்ணன் — ஏ; எல். ராகவன்
நடித்த

**மகிழம்பூ**

# பாகிஸ்தானில் வெளிநாட்டு பயணத்துக்குத் தடை

## இந்திய விமான அத்துமீறல்; பாக். குற்றச்சாட்டு

கராச்சி, ஜூலை 4

பாகிஸ்தானிலிருந்து வெளிநாடுகளுக்குப் பயணஞ் செய்வதன்மீது பாகிஸ்தான் அரசு தடைவிதித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து வர்த்தகம் சம்பந்தமாக அன்றி வேறு காரணங்களுக்காகப் பிரயாணஞ் செய்வதைத் தடுத்து வைத்திருப்பதாக கராச்சியில் வெளியிடப்பட்ட அரசாங்க அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக சம்பந்தமாகப் பிரயாணஞ் செய்பவர்கள் கூட அரசாங்கத்தின் அதிகார பூர்வமான அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

அண்மையில் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஒட்டி ஏற்பட்ட இராணுவச் செலவினங்கள் காரணமாகவும் பாகிஸ்தானின் வெளிநாட்டுச் செலாவணியை சம்பாதிக்கும் ஏற்றுமதிப் பொருட்களான கிழக்குப் பாகிஸ்தானில் பயிரிடப்படும்சணல் போன்றவை உற்பத்தி செய்யப்படாமையால் பாகிஸ்தானின் வெளிநாட்டு செலாவணி குறைந்தமையாலுமே இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

### இந்தியப்போர் விமானம்

இதற்கிடையில் இந்தியப் போர் விமானங்கள் கிழக்குப் பாகிஸ்தான்மீது பறந்து சென்றதாக பாகிஸ்தான் இந்தியா மீது குற்றஞ் சாட்டியுள்ளது. 4 இந்தியப் போர் விமானங்களும் ஹெலிகாப்டரும் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள தினாஜ்பூர் பகுதியில் பறந்ததாகவும், இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை தோன்றிய பின் இந்தியப் போர் விமானங்கள் பாகிஸ்தான்மீது பறந்ததாக பாகிஸ்தான் குற்றஞ் சாட்டுவது இதுவே முதல் தடவையாகும்.

இதுபற்றி இந்தியா இதுவரை எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை.

## ‘அகதிகள் நாடுதிரும்ப ஐ. அ. கு. உதவும்’

கெய்ரோ, ஜூலை 4

இந்தியா வந்திருக்கும் கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் பாகிஸ்தானுக்குத் திரும்பிச் சென்று பாதுகாப்புடன் வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு தன்னாலான முயற்சிகளை ஐக்கிய அரபுக் குடியரசு எடுக்குமென ஐ. அ. குடியரசு ஜனாதிபதி திரு. அன்வர் சதாத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

இந்திய விவசாய அமைச்சர் பஃருதீன் அலி அகமத் பிரதமர் இந்திராகாந்தியின் கடிதத்தை அன்வர் சதாத்திடம் கொடுத்தார்.

திரு. அன்வர் சதாத்துடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை மிகவும் திருப்தியாக இருந்ததாகவும், இந்தியாவுக்கு வந்திருக்கும் அகதிகள் பிரச்னையின் தீவிரத்தன்மையை அவர் முற்றிலும் புரிந்திருப்பதாகவும் பேச்சுவார்த்தையின் பின் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் திரு. அலி அகமத் கூறினார்.

இதற்கு முன்பாக ஐ. அ. குடியரசுப் பிரதமர் திரு. பௌசியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

நிருபர் பிரச்னை:

## அமெரிக்கா எடுத்த முயற்சி தோல்வி

நியூயோர்க், ஜூலை 4

நியூயோர்க் டைம்ஸ் நிருபரை டாக்காவிலிருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட பாகிஸ்தானின் உத்தரவை, திரும்பப்பெறச் செய்ய அமெரிக்கா எடுத்த முயற்சிகள்யாவும் தோல்வியில் முடிந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிட்னி சாம்பர்க் என்ற அந்த நிருபர் 9 நாட்களாக கிழக்குப்பாகிஸ்தானில் தங்கியிருந்து நியூயோர்க் டைம்சுக்கு செய்திகள் அனுப்பிவைத்தார். அச்செய்திகள் விஷமத்தனமானவை, பொய்யானவை என்றும் அந்நிருபர் 24 மணி நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்றும் பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டது.

இதுவிஷயமாகப் பாகிஸ்தான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு பாகிஸ்தானிலுள்ள அமெரிக்கத் தூதுவரை அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளதாகத் அறியப்படுகிறது.

### பதிவு இலக்கம் இல்லாத ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் பதிவு இலக்கம் இல்லாது கஷ்டப்படுகின்றனர். பதிவு இலக்கம் பெறுவதற்காக பிறப்புச் சாட்சிப்பத்திரங்களும், திருமணப் பதிவுப் பத்திரங்களும் நியமனக் கடிதங்களும், தராதரப்பத்திரங்களும் மற்றும் தேவையான பத்திரங்களும் அனுப்பியும் இதுவரை அவர்களுக்கும் பதிவு இலக்கம் அனுப்பப்படவில்லையாம். தராதர மற்ற ஆசிரியர்களுக்கும் சிலருக்கு பதிவு இலக்கம் இல்லையாம். இது பற்றி ஆசிரியர்கள் கவலைகொண்டுள்ளனர்.

### இயற்கைவளத்தை நாய்கள் மூலம் கண்டுபிடிக்கலாம்

மாஸ்கோ, ஜூலை 4

நிலத்துக்கடியில் புதைந்து கிடக்கும் இயற்கை வளத்தை தேடிப்பிடிக்க நாய்களை உபயோகிக்கலாம்.

சோவியத் நாட்டில் நடத்தப்பட்ட பரிசோதனைகள் இதை ஊர்ஜிதம் செய்துள்ளன. விசேஷ பயிற்சியளிக்கப்பட்ட நாய்கள் மூலம் 12 மீட்டர் ஆழத்திலுள்ள நிக்கலை மோப்பம் பிடித்து கண்டு பிடித்துள்ளனர். சில மிருகங்கள் கந்தக, விஷப் பாஷாண படிவங்களை மாத்திரமன்று மரகதக்கல் போன்றவற்றையும் கண்டு பிடிக்க வல்லன.

பல நூறு மீட்டர் ஆழத்தில் புதைந்து கிடக்கும் இயற்கை வளத்தை மோப்பம் பிடித்து அறிய சில நாய்களுக்கு முடியும்.

நவீன கருவிகளுடன் சில பயிற்சிபெற்ற மிருகங்கள் போட்டியிட்டு எமக்கு இயற்கை வளம் பொதிந்து கிடக்கும் பிரதேசங்களை காட்ட முடியுமென்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதில் மிக தகுதி வாய்ந்த மிருகங்கள் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு ரக நாய்களாகும்.

கரேலியாவிலுள்ள லைக்ஷ்ஏரிக்கு அருகாமையில் முதல் பரிசோதனை நடத்தப்பட்டது. 95சத வீதம் பாசி படிந்த இப்பூமிக்கடியில் தாதுவளமுண்டென்று கருதப்படுவதால் இப்பிரதேசம் பரிசீலனைக் கெடுக்கப்பட்டது. பூகோளப் படத்தில் ஏற்கனவே குறிப்பிடப் பட்டிருந்த தாது வளங்களை நாய்கள் கண்டுபிடித்தன.

மிருகங்களை பயிற்சி கொடுப்பதற்கு நாலைந்து மாதங்கள் பிடிக்கும். இத்துறையில் பரிசோதனை நடத்தியுள்ள ஜியார்ஜி வஸிலியேவ் என்ற விஞ்ஞானி இவ்வழிகாலத்தில் பெரும் பலாபலன் கிடைக்கும் என்று கருதுகிறார்.

தமிழ் நாடு இலைதிருட்டுகள்

## “இன்டர்போல்” பொலிஸ் மாநாட்டில் விவாதிக்கப்படும்

சென்னை, ஜூலை 4

வருகிறசெப்டம்பர்மாதம் கனடாவின் மொன்ட்ரியல் நகரில் நடக்கும் ‘இன்டர்போல்’ என்ற உலகபொலிஸ் மகாநாட்டில் தமிழ்நாட்டில் நடந்துவரும் சிலை திருட்டுக்களைத் தடுக்கும் வழிகள் பற்றி விவாதித்து நடவடிக்கை எடுக்கப்படும். சென்னை மாநில பொலிஸ் அதிபர் அதில் கலந்துகொள்வார்.

இத்தகவலை அண்மையில் சிலைகள் திருட்டுப் பற்றி தமிழ்நாட்டு மேல்சபையில் நடைபெற்ற விவாதத்தின் போது தமிழக முதலமைச்சர் திரு மு. கருணாநிதி தெரிவித்தார் அவர்மேலும் கூறியதாவது:

தமிழ்நாட்டில் சிலைகள் திருட்டு அதிகமாக நடந்து வருவதற்குக் காரணம் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் இந்த சிலைகளுக்கு அதிக விலை கொடுக்கப்படுவதே என்றும் வெளிநாடுகளில் தமிழ் நாட்டு சிலைகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறதென்றும் இதுபற்றி டெல்லி அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு கடும் நடவடிக்கை எடுக்கதமிழகஅரசு ஏற்பாடு செய்துள்ளது என்றும் கூறினார்.

## சாம்ராஜ்ய இளைஞர் பரிவர்த்தனைச் சபை

லண்டன், ஜூலை 4

சாம்ராஜ்ய இளைஞர் பரிவர்த்தனை சபை உதயமாகி இன்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. உத்தியோகபூர்வமான அங்கீகாரமோ, நிதியோ அன்றி காரியாலயமோ இல்லாமல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இளைஞர் நிறுவனம் இன்று உத்தியோகபூர்வமான அங்கீகாரம் பெற்று அரசு குடும்பத்தினரின் ஆதரவுடன் சொந்தக் காரியாலயத்துடன் இயங்கிவருகிறது.

இந்த இளைஞர் இயக்கத்தில் கிட்டத்தட்ட எழுபத்தேழு பிரிட்டிஷ் ஸ்தாபனங்களும் உயர் கல்வி நிறுவனங்களும் அங்கத்துவம் வகிக்கின்றன. பிரிட்டனுக்கும் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் இடையே இளைஞர்கள் ரீதியாக தொடர்பையும் நல்லெண்ணத்தையும் ஸ்தாபிப்பதே இந்த இளைஞர் சபையின் இலட்சியமாகும். இளைஞர்களை நாட்டுக்கு நாடு பரிவர்த்தனை செய்வது இவ்வித தொடர்புகளுக்கான தலைவர்களை அளிப்பது ஆகியனவும் இதன் நோக்கங்களாகும்.

சென்ற வருடம் மார்ச் மாதம் இந்த இளைஞர் சபை தனது முதலாவது தேசிய மாநாட்டை நடத்தியதை அடுத்து பிரிட்டிஷ் அரசாங்கம் இளைஞர் பரிவர்த்தனைக்காக இச்சபைக்கு நிதியுதவி அளிக்க முன்வந்தது. ரோட்ஸ் தர்மநிதி ஸ்தாபனம் உட்பட பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் இச்சபைக்கு நன்கொடைகள் வழங்கப்பட்டன. இதன் பயனாக, தனக்கென ஒரு சொந்த தலைமைக் காரியாலயத்தை ஸ்தாபித்ததுடன் கடந்த நவம்பர் மாதத்தில் இந்தச் சபை சாம்ராஜ்ய இளைஞர் பரிவர்த்தனை கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்தது.

கடந்த மார்ச் மாதத்தில் பதினாறுயிரம் பவுண்கள் செலவில் 27 இளைஞர் பரிவர்த்தனை திட்டங்களை இச்சபை அறிவித்தது. இத்திட்டங்களின் மூலம் 500 இளைஞர்கள் சாம்ராஜ்ய நாடுகளைச் சுற்றிப் பார்வையிட வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

### சோவியத் எழுத்தாளர் மகாநாடு

மாஸ்கோ ஜூலை, 4

இங்குமுடிவடைந்த சோவியத் எழுத்தாளர் யூனியன் மகாநாடுமுதுபெரும் நாவலாசிரியர் கான்ஸ்டன்டைன் ஃபெடினை தலைவராகதெரிவு செய்தது.

7,000 எழுத்தாளர்களைக் கொண்ட இச்சங்கத்தின் பொதுக் காரியதரிசியாகஇதுவரை கடமையாற்றிய ஃபெடின் முதலி முறையாக உருவாக்கப்பட்ட தலைவா பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

46பேரைக்கொண்ட செயலகமும் தெரிவு செய்யப்பட்டது.

சைபீரிய விவசாயியின் மகனான 60 வயதடைந்த ஜார்ஜ் மார்கோவ் பொதுக் காரியதரிசியாக பணியாற்றுவார்.

### இன்னும் ஒப்படைக்க வில்லையாம்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு பட்டினசபையின் சந்தையில் உள்ள மாடறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளுக்கான ஆடு, மாடுகளை முல்லைத்தீவு மிருக வைத்தியர் பரிசோதனை செய்து சிபார்சு செய்து வந்தார் ஆனால் சிலகாலமாக அவரின் பதவி காலியாக இருந்தபடியால் முல்லைத்தீவுச் சுகாதாரப் பரிசோதகரிடம் இக்கடமைகள் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் சென்ற இரு ஆண்டுகளாக நிரந்தரமான மிருக வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டும் இதுவரை அவர்களிடம் இக்கடமைகளை ஒப்படைக்கவில்லை எனத் தெரிகிறது. முல்லைத்தீவு பட்டினசபையிடம் இது சம்பந்தமாக பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

மணிவாக்கு

புகையினால் நெருப்பும், அழுக்கினால் கண்ணாடியும், கருப்பையினால் பிண்டமும் மறைந்திருப்பது போல, காமக்குரோதங்களால் ஞானம் மறைந்திருக்கிறது.

— கீதை.

ஈழநாடு

Eelan du National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

... ஆனிமாதம் 21 - திங்கள் (5 - 7 - 71)

## மொழித் தீர்மானம்

அரசாங்க மொழி விஷயமாக அரசியலமைப்பு சபையில் ஐந்து நாட்களில் நடைபெற்ற விவாதத்துக்கு, அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அளித்த பதிலில், ஒரு முக்கியமான வாதத்தை வற்புறுத்தினார். சிங்களம் மட்டும் கொள்கையை தமிழரசுக் கட்சியினர் ஏற்கெனவே ஒப்புக்கொண்டுவிட்டதால், இப்போது அக்கொள்கையைத் தழுவிய பதினோராவது அடிப்படைத் தீர்மானத்தை அவர்கள் ஏற்க மறுக்க நியாயமில்லை என்பதே அவரது முக்கியமான வாதம்.

இதற்குத் தமிழரசுக் கட்சியின் சார்பாக அளித்த பதிலில், பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தை அப்படியே அமுல் செய்வதாயின் தாங்கள் அதை ஏற்கத் தயாரென்பதுதான். அந்த ஒப்பந்தத்தில் மொழிவிஷயம் மட்டுமன்றி பிரதேச சபை முதலியன அடங்கியுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்க வேண்டுமென்றும் தமிழ்மூலம் கல்வி கற்றவர்கள், அரசாங்க உத்தியோகங்களுக்குத் தமிழ்மூலம் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா ஒரு சமயம் சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டுமென்ற கொள்கையை ஆதரித்தவர். பின்னர் நாட்டில் ஏற்பட்ட பல சம்பவங்களால் நிலைமை மாறியது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியதென்றாலும், நியாயமான அளவு தமிழ் உபயோகத்துக்கான சட்டமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தச் சட்டத்துக்கான விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. அந்த விதிகள் மூலச் சட்டத்துக்கு மாறானவை என்றும், நீதிமன்றத்தில் இவை நிராகரிக்கப்படுமென்றும் உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா வாதித்தார்.

12-வது அடிப்படைத் தீர்மானத்தைப்பற்றி சென்ற வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற விவாதத்தின்போது நியமன மெம்பர் அஸீஸ் ஒரு முக்கிய விஷயத்தை எடுத்துக் கூறினார். பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தப்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் (Shall) என்று இருக்கையில், தமிழ் விசேஷ உபயோகச்சட்டத்தில் 'இருக்கலாம்' (May) என்று இருப்பதாகவும், அந்த ஒப்பந்தத்தில் உள்ளது போலவே இச்சட்டத்திலும் இருந்திருந்தால் மொழிப்பிரச்னை நல்லபடியாகத் தீர வழிபிறக்கலாமென்றும் சபையிலுள்ள தமிழ்ப் பேசும் பிரதிநிதிகளை கூட்டிப்பேசி, இதுபற்றிய சுமுகமான ஏற்பாட்டைச் செய்யலாமென்றும் வாதித்தார். யாழ்ப்பாண பிரதிநிதி, அரசியல் நிர்ணய சபையில் இருந்து வருவதால், மொழிச்சிக்கல் சமரச முறையில் தீர இன்னும் நம்பிக்கையிருப்பதாகவும் சொன்னார்.

மொழிபற்றிய அடிப்படைத்தீர்மானம், சபையில் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேறியதென்றாலும், தமிழ்ப் பேசும் மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் தமிழையும் அரசாங்க மொழியாக்க வேண்டுமென்று கொண்டுவந்த திருத்தம் நிராகரிக்கப்பட்டதால், அச்சபை நடவடிக்கைகளில் இனி கலந்துகொள்வதில்லை என்று தமிழரசுக் கட்சியினர் அறிவித்தனர். தங்கள் மொழிக்கு சம உரிமை அளிக்கப்படாதது தங்கள் மானத்துக்கு இழுக்கென்றும், இனி இச்சபை நடவடிக்கையில் கலந்துகொள்வதால் பயனில்லை என்றும் தெரிவித்தனர். இந்த நிலைமை, சபையில் அரசாங்கக்கட்சி உள்ளிட்டு யாருக்கும் மகிழ்ச்சி அளிக்க முடியாது.

மொழிப் பிரச்னை தீர்ந்து போன விஷயமென்றும் அதைப்பற்றி இனி பேசுவதற்கில்லை என்றும் முன்னர் வாதிக்கப்பட்டதென்றாலும் அரசியல் அமைப்புச் சபையில் இதைப்பற்றி ஐந்து நாட்கள் விவாதிக்கப்பட்டுள்ளது. சிங்களம் 'மட்டும்' என்ற திருத்தப் பிரேரணைக்கு சாதகமாக மூவர் மட்டுமே வாக்களித்தனர். மொழி விஷயத்தில் மனமாறுதல் ஏற்பட்டுள்ளதற்கு இது ஒரு நல்ல அறிகுறி. ஒருசமயம் தமிழருக்கு சமஅந்தஸ்து அளிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியவரே இன்று அரசியல் அமைப்பு அமைச்சராக இருக்கின்றார். சிங்களம் அரசாங்க மொழியாவதை தமிழரசுக்கட்சியினர் உட்பட யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தமிழர் தாங்கள் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜையாக இல்லாமல் சரிசமமாக வாழவே தங்கள் மொழிக்கு உரிய அந்தஸ்தைக் கேட்கின்றனர். அவர்களது கோரிக்கைக்குச் செவிசாய்ப்பதால் நாட்டுக்கு நலமேயன்றி எவ்விதத்திலும் தீமையில்லை. இவ்விவாதத்தில் வகுப்புவாத உணர்ச்சிகள் எழாததுடன் தமிழரின் கோரிக்கை அநீதியானதென்று யாரும் கூறவில்லை. இது பற்றிய அடிப்படைத் தீர்மானம் நிறைவேறியதென்றாலும் மொழிப் பிரச்னை தீரவில்லை. தேசிய ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் கருதி, இவ்விஷயமாகத் தமிழரின் மானத்தைக் காக்கக் கூடியவகையில் தக்க திருத்தங்களைச் செய்ய

## அரசியல் நிர...

# மொழித் தீர்மானம் ...
# பிரச்னை தீ...

முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தம் என்ன? சிங்களத்தை நாடெங்கும் அரசாங்க மொழியாக்குவதை தமிழரசுக்கட்சியினர் அந்த ஒப்பந்தம் மூலம் ஏற்றுக்கொள்ளவில்லையா? செனேட் சபையிலும், பார்லிமெண்ட் சபையிலும்கூட இந்த இரகசியம் அம்பலமாகிவிட்டனவே. அப்படி ஏற்றுக்கொண்ட தமிழரசுக் கட்சியினர், இப்போது அதே மொழிக்கொள்கை அடங்கிய 11வது அடிப்படைத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ள மறுப்பானேன்?

இதுவே அரசியல் நிர்ணய சபையிலே மொழி விஷயமாக ஐந்து நாட்களாக நடைபெற்ற நீண்ட விவாதத்துக்கு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அளித்த முக்கியமான பதில் வாதமாகும். டட்லி-செல்வா இரகசிய ஒப்பந்த விபரம் இதுவரை இரகசியமாகவே உள்ளது. அவ்வித ஒப்பந்தம் இருந்ததென்பதைத் தமிழரசுக்கட்சியோ திரு. டட்லி சேனநாயக்காவோ மறுக்கவில்லை. ஒப்பந்த நிபந்தனைகள் இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும். ஒரு சாரினர் அதை நிறைவேற்றிவைக்க முடியாவிடின் அது மற்றவரை எப்படிக் கட்டுப்படுத்தும்? அது செல்லாக்காசாகிவிட்டது. அதை மூடிவைக்க வைக்க, மற்றவர்களுக்குச் சந்தேகம் அதிகரிக்கின்றது. ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து ஏதோ 'சதி' செய்துவிட்டதாக தமிழரசுக்கட்சி மீது குற்றஞ்சாட்டப்படுவதால், தங்கள் நிலைமையைத் தெளிவாக்க அக்கட்சியினர் அந்த இரகசிய ஒப்பந்தத்தை உடன் பகிரங்கப்படுத்தித் தங்கள் நிலையை விளக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டது. இன்னும் அதை மூடிமூடிவைப்பதால் நன்மையைவிடத் தீமையே அதிகமாகும்.

மொழி உள்ளிட்டுத் தமிழரின் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை. தனி ஒரு கட்சி மூலம் அதற்குத் தீர்வுகாணலாமென்று செய்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை. வட்டமேசை மாநாட்டின் மூலம் இதைத் தீர்க்கவேண்டுமென்ற யோசனையை முன்னர் எதிர்த்த தமிழரசுக் கட்சியினர் இப்போது அதே யோசனையை ஆதரிக்கின்றனர். எல்லாக் கட்சித் தலைவர்களும் அடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டி, மொழி விஷயத்தைப் பற்றி ஒரு நல்ல முடிவு செய்ய வேண்டுமென்று சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் கேட்டுக்கொண்டார். இவ்விஷயமாக ஒரு சமரசம் ஏற்படவேண்டுமென்பதே தனது ஆவல் என்றார். ஆனால் இந்த யோசனையைப் பற்றி அமைச்சர் ஒருவித பதிலும் கூறவில்லை. ஏதோ சமரசம் வரக்கூடுமென்று பலத்த வதந்தி அடிபட்டது. யாழ்ப்பாணப் பிரதிநிதி மார்டின் அவர்கள், அமைச்சரிடமும், எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆரிடமும் சபையில் விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது ஏதோ பேசிக்கொண்டிருந்தார். பின்னர் விசாரித்ததில், விவாதத்தை நான்காம் நாள் முடித்துவிடாமல் மறுநாளும் நீடிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டதாகவும் இதற்குச் சபைத் தலைவர் உள்ளிட்டுப் பலரும் ஒப்புக்கொண்டதாகவும் தெரிகிறது.

இந்த விவாதம் விரிவாகவும் அமைதியாகவும் நடக்க முடிந்ததென்றால் அதற்குப் பெரிதும் காரணம் தலைவர் ஸ்டான்லி திலகரத்னாதான். ஆத்திர உணர்ச்சியுடன் சிலர் பேசுகையில் ஏதாவது நகைச்சுவையுடன் கூறிச் சபையைச் சிரிக்கவைத்து, நிலைமையைப் பன்முறையும் காப்பாற்றிவிட்டார்.

ஒருசமயம் கோப்பாய்ப் பிரதிநிதி கதிரவேற்பிள்ளைக்கும், அமைச்சர் கொல்வினுக்கும் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது அமைச்சர்தான் புத்திசாலித்தனமாக நடப்பதாகவும், கோப்பாய் பிரதிநிதியும் அவ்விதமே செய்யவேண்டுமென்றும் குரலைப் பெரிதாக்கிக் கொண்டு கூறவே தலைவர் குறுக்கிட்டு "இருவரும் புத்திசாலிகள்" தான் என்று கூறியதும் சபையனைத்தும் சிரிக்கவிட்டது. நான்காம் நாளே விவாதத்தை முடித்துவிடவேண்டுமென்று தலைவர் எண்ணியிருந்தார். ஆனால் தமிழரசுக்கட்சி சார்பாகக் கூறிய யோசனைக்கு அவர் செவிசாய்த்து இது முக்கிய விஷயமென்றும், எல்லாருக்கும் பேச, கூடிய அவகாசம் அளிக்க விரும்புவதாகவும் கூறி அவ்விதமே செய்தார்.

சிங்களத்தையும் தமிழையும் அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்க வேண்டுமென்று தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. தியாகராசா ஒரு திருத்தப் பிரேரணைக்கு முன்னறிவித்தல் செய்திருந்தார். நிகழ்ச்சி நிரலில் அது அச்சடிக்கப்பட்டிருந்தது. ஆனால் விவாதத்தன்று காலையில், சபை கூடுவதற்கு சில நிமிடங்களுக்கு முன் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அரசியலமைப்பு அமைச்சரிடம் சென்று ஏதோ பேசிக்கொண்டிருந்தார். பின்னர் அத்திருத்தப் பிரேரணையை அவர் கொண்டுவரவில்லை.

அப்பிரேரணையைக் கொண்டுவருவதாக முதலில் ஒப்புக்கொண்ட அவர், பின்னர் அதை தழுவவிட்டதைப் பற்றி, தமிழ்க்காங்கிரஸ்கட்சிக் காரியதரிசி குறைகூறி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பத்திரிகை மூலம் அறிவித்துள்ளார். அரசாங்கக்கட்சியில் தமிழ்க்காங்கிரஸ் மெம்பர்கள் மூவரும் சேர்ந்துவிட்டதால் தான் அம்மூவரும் இவ்விதம் நடக்கவேண்டி ஏற்பட்டதுபோலும். நாட்டில் சோஷலிசம் வருமாயின் மொழிப்பிரச்னையும் நீங்கிவிடுமென்று அக்கட்சியினர் நம்பிக்கை தெரிவித்தனர். இம்மூவரும் அரசாங்கப் பக்கம் இருந்ததால் தமிழ்த்தலை... பேச்சு எழமுடியா... ழரசுக்கட்சியைத் ... துடன் நின்றது.

அரசியல் நிர்... யிலே தமிழரசுக்க... ருக்கும் தமிழ்க்கா... கட்சியினருக்கும் ப... பகிரங்கமாக மோ... ஏற்பட்டன. இரு ... ரும் இப்படி மோதி... டது மற்றவர்கள் ... ரும்படியாக இருந்த... சிவலைமைப்பு அ...

இதைக் கூறினர். ... வுக்கு வடக்கே நடை... மோதல்கள் இப் ... முதன்முறையாகச் ... பிலே நடப்பதைப் ... முடிவதாகவும், த... கட்டுப்பாடாகவும் ... யாகவும் உள்ள... தாங்கள் நினைத்... சரியல்ல என்பது இ... தெரிந்துவிட்டதா... அமைச்சர் கூறினர்.

**ஃகே. பி. ஹரன்**

### புற்றுநோய் ஆராய்ச்சியில் புது நம்பிக்கை

ஹூஸ்டன், ஜூலை 4

அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகள் புற்றுநோய்க்கிருமி ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இந்தக் கிருமியைக் கொண்டு புற்றுநோயின் தன்மைகள் பற்றியும் அதனைக் குணப்படுத்துவதற்கான மார்க்கங்கள் பற்றியும் ஆராயப்போகிறார்கள். புற்றுநோய்த் தடுப்புக்கான மருந்தொன்றை அல்லது புற்றுநோய் ஏற்படாமல் தடுப்பதற்கான தடுப்பூசி மருந்தொன்றை இவர்கள் கண்டு பிடித்துவிடுவார்கள் என்று நம்பப்படுகின்றது.

# பறங்... வண்... இன்று ...

"திருக்கண்டேன் பொன் மேனிகண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் செருக் கிளரும்
பொன்னாழி கண்டேன் புரி சங்கங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று"

திருமாலின் திருக்கோலத்தைக் கண்டு ஆழ்வார் ஒருவர் பாடிய இப்பாடலின் பொருளை அறிவதற்கல்ல கண்ணால் கண்டு உணர வேண்டுமானால் இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் செல்லுங்கள்.

ஆமாம் இன்று திங்கட்கிழமை அங்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. 1884ம் ஆண்டில் ஒரு கும்பிஷேகமும் 1941, 1958 ம் ஆண்டுகளில் அஷ்டபந்தன கும்பாபிஷேகங்களும் நடைபெற்றபின் இன்று சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

ஒல்லாந்தரும் போர்த்துக்கீசியரும் இந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்தபோது இங்குள்ள சைவாலயங்களை இடித்துத் தகர்த்தனர். மக்களை மதமாற்றஞ் செய்தனர்.

ஆனால் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் மீது மட்டும் அவர்கள் கைவைக்கவில்லை.

முதலியார் செ. இராஜநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் பெருமாள் கோயில் பற்றி பின்வருமாறு சுருக்கமாகக் கூறியிருப்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தம்.

"குணபூஷண சிங்கையாரியன் காலத்தில் வரப்பட்டகாருகாவிளைஞரது தொழில் விருத்தியுற்றிருந்த படியாற் போலும், தென்னிந்தியாவிலிருந்து ... தொழிலை நடத்துவதற்குக் கொண்டு வரப்பட்ட சேணியச் செட்டிகள் சமயத்தடையின்றித் தங்களுக்கு வேண்டிய சமய ஆலயமாகிய பெருமாள் கோயிலைக் கட்டி அதில் வணங்கி வந்தார்கள் ... கள் மாத்திரம் ... வராகுவதற்கு வற்... பட்டவில்லை. இதை... குருமார் பல மு... முறையிட்டு செய்த... சிறை வருமானத்தி... பொருள்வருவாயிலு... டுப்பாடுவருமென அ... வாளாவிருந்தனர்" ... அவர் குறிப்பிடுகிற...

பெருமாள் கோயி... போதுள்ளதுபோல் ... அமைப்புடன் இல்... டாலும் சிறிய கோ... அக்காலத்தில் இரு... வேண்டும்.

கி.பி 1847 ம் ... கில் குணபூஷண சிங்... யன் பட்டம்சூட்டம் ...



வண்ணை... நேயர் கோ...

# ...ம் நிர்ணயசபை

# ...ம் நிறைவேறினலும் ... தீரவில்லை

...தமிழ்த்துவேஷமான ...சு எழமுடியாமல் தமி ...க்கட்சியைத் தாக்குவ ...ன் நின்றது.
...ரவியல் நிர்ணயசபை ... தமிழரசுக்கட்சியின ...தும் தமிழ்க்காங்கிரஸ் ...சியினருக்கும் பன்முறை ...ரிகமாக மோதல்கள் ...ரட்டன. இரு சாரின ... இப்படி மோதிக்கொள் ... மற்றவர்கள் பரிகசிக் ...படியாக இருந்தது. ஆ ...அமைப்பு அமைச்சரே

## ...ஹரன்

...தக் கூறினர். ஆனையிற ...ஞ் ...க்கே நடைபெற்ற ...தல்கள் இப்போ ஐ ...ன்முறையாகக் கொழும் ...ல நடப்பதைப் பார்க்க ...வதாகவும், தமிழர்கள் ...டுப்பாடாகவும் ஒற்றுமை ...வும் உள்ளனரென்று ...கள் நினைத்திருந்தது ...பல்ல என்பது இப்போது ...ரிந்து விட்டதாகவும் ...மச்சர் கூறினர். மொழி விஷயமாகவும் தமிழ்ப்பிரதி நிதிகளிடையே ஒற்றுமை யில்லாமற் போனது பெரிய துரதிருஷ்டம்.

மட்டக்களப்புப் பிரதிநிதி இராசதுரை சில வருடங்களுக்கு முன் டாக்டர் கொல்வின் 'டெயிலிநியூஸ்' பத்திரிகையில் எடிட்டாவிலே சிறுபான்மைப் பிரச்னையையும் மொழிப்பிரச்னையையும் எப்படித் தீர்த்துள்ளனர் என்று எழுதியிருந்ததன் தமிழ் மொழிபெயர்ப்பைச் 'சுதந்திரன்' பத்திரிகையிலிருந்து படித்தார். இதைப் பற்றி அமைச்சர் பலமாக ஆட்சேபித்துச் சில கடும் சொற்களையும் சொல்லித் தாம் எழுதிய ஆங்கில வசனத்தைப் படிப்பதே முறை என்று சொன்னர். பின்னர் குறிப்பிட்ட 'டெயிலிநியூஸ்' பத்திரிகையைச் சபையின் புத்தகசாலையிலிருந்து எடுத்துவரச்செய்து கோப்பாய் பிரதிநிதி படித்தார். "இப்படிச் செய்வதுதான் சரியானமுறை" என்று அமைச்சர் கூறியதும் "அக்கட்டுரையில் கூறியுள்ள யோசனையின்படி தாங்கள் செய்வதே சரியான முறையாகும்" என்று பதில் கொடுத்துவிட்டு "நீங்கள் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பையே நீங்கள் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. ஆனல் தமிழ்மக்கள் மட்டும் மொழிபெயர்ப்பைக் கொண்டு திருப்தியடைய வேண்டுமா?" என்று கேட்டபோது அமைச்சர் காதில் விழாததுபோல் பேசாமல் இருந்துவிட்டார்.

தெகிவளை-கல்கிசை மெம்பரான திருமதி விவியன் குணவர்த்தன அடிக்கடி குறுக்கிட்டுப் பேசுவது வழக்கம். கோப்பாய் மெம்பர் பேசுகையிலும் இவ்விதம் பன்முறை குறுக்கிட்டதும் திரு. கதிரவேற்பிள்ளை தலைவரைப் பார்த்து "ஐயா சிலசமயம் பெண்களுடன் இருப்பது கஷ்டமாக உள்ளதென்றாலும் அவர்கள் இல்லாமலும் சமிப்படவில்லை" என்று கூறியதும் சபையில் ஒரே சிரிப்பு. இதைச் சகிசைப் பெண் பிரதிநிதி எதிர்பார்க்கவேயில்லை அவர் வாக்மணி நேரத்துக்குமேல் பேசாமல் இருந்துவிட்டார்.

தங்கள் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்காத நிலையில் தாங்கள் இச்சபையில் இனி இருப்பது பயனற்றதென்றும் என்றாலும் இனி அரசாங்கத்தின் முற்போக்கான முயற்சிகளுக்குத் தமிழரசுக்கட்சி தொடர்ந்து ஆதரவு அளித்துவருமென்றும் கோப்பாய்ப் பிரதிநிதி தமிழரசுக்கட்சி சார்பாகக் கடைசியாகப் பேசுகையில் குறிப்பிட்டார். அவரது பேச்சு ஆணித்தரமாக அமைந்தது. சில பேச்சுக்களைத்தான் கேட்டேன். அவற்றுள் சாவகச்சேரி, உடுப்பிட்டிப் பிரதிநிதிகளின் பேச்சுக்களும் மறக்கமுடியாதன.

மொழித் தீர்மானம் சபையில் நிறைவேறிவிட்டது தான். என்றாலும் இதனல் மொழிப்பிரச்னை தீரவில்லை. இப்பிரச்னை தீர இப்போது கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டுவிட்டது பெரிய துரதிருஷ்டமாகும்.

......

## ஒருநாள் சம்பளம்

வாரிவு, ஞாயிறு

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாசாலை ஆசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை அரசினர் திரட்டி வரும் புனர்வாழ்வு நிதிக்கு வழங்க முன்வந்துள்ளனர். தங்களது இம்மாதச் சம்பளத்தில் இதற்குரிய பணத்தை எடுக்குமாறு இவர்கள் வடமாநில வித்தியாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

வடமகுதியில்

## சில பாடசாலைகளில் நிர்வாகம் சரியில்லையாம்

குருநகர், ஞாயிறு

"இன்றைய மக்கள் அரசு நாட்டின் கல்வித்திட்டத்தில் நல்ல திட்டங்களை உருவாக்குவதற்காக முயன்று வருகின்றது. இத்திட்டத்தால் தரங்குறைந்த பாடசாலை மாணவர்கள்கூட விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வியைப் பெறவாய்ப்பு ஏற்படுகிறது. அரசாங்கம் இந்நாட்டுப் பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக பெருந்தொகை பணத்தைச் செலவு செய்தபோதிலும், இப்பணத்தைச் சரியான முறையில் செலவு செய்து பாடசாலைகளைத் திருத்தியமைக்க சில பாடசாலைகளில் நிர்வாகம் திறமையற்றிருக்கின்றது. திறமையில்லாத நிர்வாகத்தினுல்தான் வடபகுதியில் சில பாடசாலைகள் சீரற்ற நிலையில் இயங்குகின்றன."

இவ்வாறு குருநகர் சென். ஜேம்ஸ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பெற்றேர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய நியமன எம். பி. திரு. எம். கி. சுப்பிரமணியம் குறிப்பிட்டார். மேயர் திரு. அல்பிரட் ரி. துரையப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நியமன எம் பி தொடர்ந்து பேசுகையில் ஒவ்வொரு பாடசாலையிலும் கடமையாற்றும் ஆசிரியர்களும் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து செயல்படவேண்டியது மிக அவசியமாகும் எனச்சொன்னர்.

திரு. அல்பிரட் துரையப்பா பேசுகையில், "எமது ஆசிரியர்கள் சம்பளத்தை மட்டும் கருத்தில்கொண்டு வேலையாற்றுது இந்நாட்டின் எதிர்காலச் சந்ததியான மாணவர்களின் நலன்களை மனதில் வைத்துப்பணியாற்ற வேண்டும். ஆசிரியத் தொழில் ஒரு புனிதமானது. இந்த நாட்டில் நல்ல சந்ததியை உருவாக்க உதவுவது இந்தச் சமூகத்தொண்டை நாம் கடமையுணர்ச்சியுடன் செய்யவேண்டும்." எனச் சொன்னர்.

தலைமை ஆசிரியர் தர்மலிங்கம் ஆசிரியை திருமதி சத்தியமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

"அடுத்து அரசாங்கஎழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு கே. பஞ்சலிங்கம் பேசுகையில் 'எமது வருங்கால சந்ததியினரைக் காப்பாற்றுவதற்கு அரசாங்க சேவையிலிருந்து ஆற்றும் தொண்டைவிட வெளியிலிருந்துதான் கூடுதலான சேவையைச் செய்ய முடியும். எனவே தான் இளைப்பாறிச் செல்லும் திரு. வல்லிபுரநாதன் தொடர்ந்தும் எமது எதிர்கால நல்வாழ்வுக்கு சேவையாற்ற வேண்டும்' என்று கூறினர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை பேசுகையில் திரு வல்லிபுரநாதனின் சேவை யாழ்ப்பாண மக்களுக்கு புதிய தல்லவென்றும், இவரது பேரன் வகித்த பதவியை இவரது தந்தை வகித்ததாயும் அதுருக்குப்பின் தந்தையின் கடமையை மைந்தன் தொடர்ந்ததாகவும், இவரைப் பாராட்டும்போது இவரது குடும்பத்தையே பாராட்டுவதாகுமென்றும் சொன்னர்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு சிவசோதி, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத் தலைவர் திரு வி. ரி. நடராஜநினம், அரசாங்க பொதுசேவை தொழிலாளர் சங்க கிளைத்தலைவர் திரு க செல்லத்துரை ஆகியோரும் பேசினர். அரசாங்க செயலக பிரதம லிகிதர் திரு எஸ் பொன்னம்பலம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

......

## அனுமதி

யாழ்ப்பாணம், திங்கள்

பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகக் கல்லூரி கொக்குவில் பல்கலைத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக அங்கு அனுமதிக்கப்பட்ட கணக்குப் பதிவியல்துறை மாணவர்கள் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கணக்குப் பதிவியல்துறை விரிவுரையாளர்களாகக் கடமையாற்றிய திரு. நா. ஞானேந்திரா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கடமையாற்ற நியமனம் பெற்றுள்ளார். திரு. இலங்காநேசனுக்கும் இக்கலாசாலையில் இடம்கிடைக்குமென நம்பப்படுகிறது. நூலகவியல் பயின்ற மாணவர்கள் தொடர்ந்து கொக்குவில் பல்கலைத் தொழில் நுட்பக்கல்லூரியிலேயே கல்வி பயிலுவர் எனத்தெரிகிறது.

......

புலோலி, ஞாயிறு

பயங்கரவாதிகளின் புனர்வாழ்வுத் திட்டத்திற்காக இப்பகுதியைச்சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளார்கள்.

சரணவாய் மகாவித்தியாலய ஆசிரியர்கள் தங்கள் ஒருநாள்சம்பளத்தைகழிக்குமாறு வடமாநிலக் கல்வி அதிபதிக்கு அறிவித்துள்ளனர்;

# பறங்கியரும இடிக்கத் துணியாத வண்ணை பெருமாள் கோயில் இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகம்

...வந்தார்கள். அவர் ... மாத்திரம் கிறிஸ்த ...துவதற்கு வந்புறுத்தப் ...வில்லை. இதைப்பற்றிக் ...மார் பல முறைகளில் ...றையிடு செய்தும் அர ...ற வருமானத்திலும் தம் ...ருள்வருவாயிலும் மூட் ...பாடுவருமென அறிந்து ...ளாவிருந்தனர்' என்று ...ர் குறிப்பிடுகிறர்.
...பெருமாள் கோயில் இப் ...துள்ளதுபோல் பெரிய ...மைப்புடன் இல்லாவிட் ...லும் சிறிய கோயிலாக ...காலத்தில் இருந்திருக்க ...ண்டும்.
...இ.பி 1847 ம் ஆண்டள ... குணபூஷணசிங்கையாரி ... பட்டம்சூட்டம் பெற்று ஆட்சிக்கு வந்தான். அக்காலத்தில் தான் காருகவினையாளர் காஞ்சியினின்றும் ஆந்திர நாட்டினின்றும் வண்ணர் பண்ணையிற் குடியேற்றப்பட்டனர்என்று கருதப்படுகிறது. எனவே பெருமாள் கோயிலும் கி பி 1547ம் ஆண்டளவில் தான் தோன்றியிருக்க வேண்டும்.

பண்டாரவாளச் செட்டிப் பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலிகளால் இக்கோயில் இன்றும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. ஆலய நிர்வாகத்தில் வண்ணை வேங்கடேசவரதராஜப் பெருமாள் கோயில் நிர்வாகம் தனிச் சிறப்புப் பெற்றிருக்கிறது.

இக்கோயிலின் ஸ்தலவிருட்சம் பலாமரமாகும், ஆலயத்தின் உட்பிரகாரத்தில் இலக்குமி அம்மன் சந்நிதிக்குப்பின் பக்கத்தில் இவ்விருட்சத்தைக்காணலாம்.

இக்கோயில் கட்டுப்படுவதற்கு முன்பு இச்சாதியைச் சேர்ந்த ஒரு பெரியவர் அப்பலா மரத்தடியில் ஸ்ரீவேங்கடேசப் பெருமான் விக்கிரகத்தை வைத்து வணங்கி வந்தாரென்றும் அதிலிருந்தே இவ்வாலயம் உற்பத்தியானதென்றும் ஓர் ஐதிகமுண்டு. அந்த ஆதி சிறிய விக்கிரகத்துக்குத் துவஜாரோகண காலத்தில் தீர்த்தத் திருவிழாவன்றும் விடாயாற்றித் திருவிழாவன்றும் ஒவ்வொரு ஏகாதசித் தினத்தன்றும் விசேஷ பூஜைகள் விழாக்கள் நடைபெறுகின்றன.

புரட்டாதி மாதத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுகிறது. உட்பிரகாரத்தில் ஒரு பக்கச் சுவரில் கிருஷ்ணவதாரத்தை எடுத்துக் கூறும் சில வர்ணச் சித்திரங்கள் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. பாகசாலைக்கு எதிரேயுள்ள சுவரில் சிறந்த தேவியர் ஒருவர் ஸ்ரீ ராமபட்டாபிஷேகக் காட்சியை வர்ணத்தில் வரையத் தொடங்கி ஓரளவு நிறைவேற்றியிருப்பினும் என்ன காரணமோ அவர் இன்னும் அதைப் பூர்த்திசெய்யவில்லை. விரைவில் அவர் அதையும் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கலாம்.

உட்பிராகாரத்தில் மகாலெட்சுமி, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஸ்ரீ ஆண்டாள், சீதாபிராட்டி சமேத ஸ்ரீராமபிரான், குழலூதும் வேணுகோபாலர், சந்தான கோபாலர் ஆகியோரின் சந்நிதிகளும் வெளியே கோபுரவாசலுக்கு எதிர்ப்புறத்தில் ஆஞ்சநேயர் கோயிலும் அமைந்துள்ளன. தெற்குப் பிராகாரத்தில் "குடதிசை முடியைவைத்து குணதிசை பாதம் நீட்டி" ஸ்ரீரெங்கநாதர் அருள் பார்வை செலுத்திக்கொண்டிருக்கிறர்.


அழகான சித்திரத் தேர், அருமையான நந்தவனம், தீர்த்தக்கேணி இத்தனையும் ஒன்றுகப்பொருந்தி பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறர் பரக்கும் கடவுளான திருமால்.

இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பவர் மலேசியாவுக்குச் சமீபத்தில் சென்று அங்கு சிவகோயில்களில் கும்பாபிஷேகம் செய்து திரும்பிய தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சாமிவிஸ்வநாதக் குருக்களாவர். வேதபாராயணர்களாக பிரம்மஸ்ரீ இ. க. சீதாராம சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், நல்லூர் வணபதீஸ்வர குரு குலமாணவர்களும் கலந்துகொள்ளுகின்றனர்.

ஸ்ரீ ஆண்டாள், மகாலெட்சுமி சந்நிதி விமானங்களிலும் மூலஸ்தான விமானம் ஆகியவைகளில் விஷ்ணு அவதாரச் சிறப்புக்களை சிவப்பிரம்மஸ்ரீ வீரப்ப ஆசாரி நாகலிங்க ஸ்தபதியார் சிறப்பாக அமைத்து அழகுக்கு அழகூட்டியிருக்கிறர்.

இந்த அழகுக்காட்சிகளையும் அந்தத் திருமாலின் திருக்கோலத்தையும் கண்டு தரிசித்து அருள்பெறும் வாய்ப்புப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள்.

'ஸ்ரீரங்கன்'



வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் முன்புறத் தோற்றம் இது. ஆஞ்சநேயர் கோவிலும் தேர்முட்டியும் முன்வாசலும் இதில் தெளிவாகத் தெரிகின்றன

படப்பிடிப்பு ஏ. வி. எம்.

### அச்சுவேலி—நாவலம்பதி

# காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## இன்று காலை நடைபெறுகிறது

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவம் சென்ற ஆனித்திங்கள் ஒன்பதாம்நாள (கடந்த மாதம் 23ம் திகதி) புதன் கிழமைகாலை ஆரம்பமாகி 13-ம் திருவிழாவான இன்று (5-7-71) திங்கட்கிழமை காலை 10மணியளவில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறவிருக்கின்றது.

**பத்மதளசித்திரத்தேர்**

தூரத்தே நின்று பார்க்கும்போது பஞ்சவர்ணங்கள் கண்ணைப்பறிக்கும் நிலையிலுள்ள அழகிய சித்திரத் தேரினை அண்மித்துச்சென்று பார்ப்போம். தேரின் அடிப்பாகம் நுண்ணியபல சித்திரங்களைக் கொண்டது. சற்சதுர வடிவத்தில் அமைந்த அடித்தளம் அழகிய செந்தாமரை இதழ் வடிவமுடையபத்மதளமாகக் காட்சி அளிக்கிறது. தேரின் தளத்தைக்கொண்டு நம்முன்னோர் தேருக்கு ஏற்ற பெயர் சூட்டினார்கள். எனவே இதற்கு பத்மதளத்தேர் (பத்மதாமரை) என்று அழைப்பதில் தவறில்லை.

காட்டுமலைக் கந்தசுவாமி கோவிலின் பூர்வீக சரித்திரத்தை ஐந்து சித்திரங்களால் விளக்கமாக அழகுற அமைந்துள்ளார் எமது சிற்பாசிரியர். சுவாமிஜி சினிஐயர் கங்கைஆற்றில் நீராடி கதிர்காமக் கந்தனை அன்போடு தரிசித்து பின் கதிரமலையில் சுவாமியை தரிசனம் செய்யும்பொழுதுமுருகப் பெருமான் சுவாமிஜி முன் பண்டாரம்போலவந்து வேலொன்றைக் கையில் கொடுத்தருளும் அற்புதக் காட்சியையும்பின் சுவாமிஜி நாவலம்பதியில் ஓர் புளிய மரத்தின்கீழ் அவ்வேலை வைத்து காட்டுமலைக்கந்தன் என்ற திருநாமத்தோடு பூசைசெய்யும் அறநெறியையும் அங்கே அமைத்திருப்பதையும் காணலாம். அடுத்து முருகப் பெருமானின் திருவிளையாடல்களில் ஒரு சிலவற்றையும் இதன் மேல் குட்டிக் குட்டிக் குதிரைகளும், சிங்கங்களும், பூதங்களும் தங்கள் நாலுகால்களையும் கைகளையும் உயர்த்தி வணக்கம் செலுத்துவது போலவும் இடையிடையே யாளிகள் சிரித்தவண்ணம் அழகுற காட்சி கொடுப்பது போலவும் செதுக்கப்பட்டு உள்ளன. இதனையடுத்துள்ள தேவாசனத்தில் பீடம் உள்ளது. 'ஐந்தெழுத்து ஓர் பலகையாகவே சேர ஆறு சாஸ்திரம் ஆறுபிரிவுகளாய் கூட தேடரிய நாலே தம் கயிறாகதிட ஆதி கதிர்காம வடிவேல தலங்க' என்ற திருப்புகழ் அடிகளுக்கு ஏற்ற தத்துவத்தை தேவாசனத்திலுள்ள பீடமும் 32 பலகைக்கால்களும் அழகுறக் காட்சி கொடுக்கின்றன. இதிலே தேரின் மேற்பாகம் பொருத்தப்பட்டுள்ளது.

தேரின் முற்பாகத்தில் சோடிக்குதிரைகள் பஞ்சவர்ணகல்யாணியை பிரம்மா கம்பீரமாக வீற்றிருந்து செலுத்தும்காட்சியையிகவும் புதுமையாகவும் அமைத்துள்ளார் நமதுசிற்பாசிரியர் கந்தசாமிஅவர்கள். இவர்யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டுள்ளார். தேருக்குரிய இலக்கணங்களை நன்கு கற்றறிந்தவர். இவரால் செய்யப்பட்ட தேர்களை யாழ்குடாநாட்டில் எப்பகுதியிலும் காணலாம்.

இத்தலத்தின் கண்ணே மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம், தலவிசேடம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்துள்ளது. இப்பழம் பதியில் மனமாசகற்றும் தீர்த்தமும் காட்டுமலை எழுந்தருளியிருக்கும் கலியுகவரதன் கார்த்திகேயன் முன் தொழு தெழுவார் வினைகளம் நீறெழ நீறணியும் பலவன் எனப்போற்றும் மகிமைதரு நீறும், இயற்கையின் எழில் நலத்தையும் தெய்வத்தன்மையையும் இனிதுணர்த்துகிறது. நாவலம்பதி மக்களின் கனவு நினைவாக மாறிவிட்டது. காட்டுமலை வேலனை பத்மதள தேரில்வைத்து வீதி வலம்வரும் நாள்வந்துவிட்டது. அதற்குமுன் வெள்ளோட்டவிழா நடைபெறுகிறது. பிரதமகுரு அவர்களின் விடாமுயற்சியே இதற்கு காரணமாகும். வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளாகிய ஆனித் திங்கள் 24-ம் நாள் 8-7-71 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பக்தர்கள் பல பாடல்களை பயபக்தியுடன் பாடிப்பக்தி பொங்கி வழியும் தொண்டமானாற்றில் (வல்லை ஆறு) காட்டுமலைக் கந்தன் தீர்த்தமாடி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதுடன் முத்திதரும் காட்டுமலை வேலவனின் ஆனிவிழா முடைவடைகிறது.

சி. அருளானந்தம்.

காட்டுமலைக்கந்தன் ஆலயத்தின் தோற்றம் இது



யாழ்ப்பாணம், திங்கள் அச்சுவேலி- நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. திருநெல்வேலி சிற்பாசாரியார் திரு. செல்லையா கந்தசுவாமி முழுவினரால் அமைக்கப்பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்டத்தை முன்னைநாள் காணி தீர்ப்பாசன மின்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. சிறீகாந்தா ஆரம்பித்து வைப்பார்.

தேர்த் திருவிழா 7-ந்திகதி காலையில் நடைபெற விருக்கின்றது. அன்று 'தேர்த் திருப்பணி மலர்' ஒன்றும் வெளியிடப்படும். இந்நிகழ்ச்சிகளில் சைவப்பெரியார்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

### யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள் முனீர்ஸ் கடையில் இரு கப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு இக்கடைச் சொந்தக்காரரால் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### உண்மை விளக்க விரிவுரை

யாழ்ப்பாணம், திங்கள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இலவசமாக நடைபெற்றுவரும் சிவஞானபோதத் தொடர் விரிவுரையின் ஓர் அம்சமாக சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான உண்மை விளக்கம் பற்றிய விரிவுரை அடுத்த சோமவாரதினத்தன்று காலை நடைபெறவிருக்கிறது.

இவ்விரிவுரைகள் கொக்குவில் ச. க. மார்க்கண்டு தலைமையில் நிகழும்.

சிவஞானபோத விரிவுரையில் முதற்பகுதி பூர்த்தியடைந்துள்ளது. பன்னிரு சூத்திரமும் நான்கு இயல்களையுமுடைய சிவஞானபோதத்தின் முதல் இயலும் முதல் மூன்று சூத்திரங்களும் பற்றிய விரிவுரை கடந்த வாரம் பூர்த்தியாயிற்று. சைவப் பெரியாரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமாகிய திரு அ. நாகலிங்கம் இதற்குத் தலைமை தாங்கினார்.

இதற்கு முந்திய விரிவுரைகளுக்கு ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு. செ. தில்லையம்பலம், ஆசிரியர் திரு. சி. சரவணமுத்து மற்றும் பல சைவ அறிஞர்கள் தலைமை தாங்கினர்.

### சனசமூகநிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு கொக்குவில் பொற்பதி இந்து இளைஞர் சங்க விநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு. ஆ.ச. பரந்தாமன், தலைவர்: திரு சி. வாமதேவன், உபதலைவர்: திரு. ந. ஜெயபாலன், காரியதரிசி: திரு. சு. விஜயகுமாரன், உப காரியதரிசி: திரு. சு. நித்தியானந்தம் தனாதிகாரி: திரு. தே. தேவகாந்தன், உபதனாதிகாரி: திரு. நா. கலீசரன், நிலையப் பொறுப்பாளர்: திரு. நா. சேதுபதி உபபொறுப்பாளர் திரு சே. தனராஜ், கணக்குப்பரிசோதகர்: திரு. சு. வாமதேவன்.

ஏழுபேர்கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(உடுப். நி)

---

பொதுமக்களுக்கு

### பதிலளிக்க வேண்டும்

கோட்டை, ஞாயிறு அரசாங்க ஊழியர்கள் தாம் நிரந்தர உத்தியோகத்தராக இருந்தபோதும் பொதுமக்கள் ஆதரிப்பதினால் தான் அப்பதவியில் இருப்பதாக எப்போதும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் சிலர் தாம் பொதுமக்களுக்கு பொறுப்பாக பதில் அளிக்க வேண்டும் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

இவ்வாறு தபால்தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் கொழும்புப் பிரிவு தபால் தந்திப்பகுதி சுப்பிரின்டன் மார்களுடன் நடாத்திய கருத்தரங்கின்போது பேசுகையில் தெரிவித்தார். மேலும் இவர் பேசுகையில் உயர்தர உத்தியோகத்தர் தம்காரியாலயத்திலிருந்து சென்று பிரச்சினைகளின் பார்வையிட்டு அவற்றிற்குத்தீர்வு காணுதல் வேண்டும் எனவும் 15 புதிய தபால் பிரிவுகள் அமைக்கப் படுமெனவும் இதன் மூலம் நன்கு கடமையாற்றமுடியுமெனவும் தெரிவித்தார்.

### பிரிவுபசார விழா

நாவடி, ஞாயிறு வடபெரும்பாகத் தபால் அத்தியட்சகர் கந்தோரின் பிரதம லிகிதராகக் கடமையாற்றி, அண்மையில் தபால் கந்தோர் பரிசோதகராகப் பதவி உயர்வுபெற்று கொழும்பு தலைமை காரியாலயத்துக்கு மாற்றலாகிச் சென்ற திரு. க. லோகநாதனின் சேவையைப் பாராட்டி, யாழ்ப்பாணம் தபால் கந்தோர் முன்றலில் பிரிவுபசார விழா ஒன்று நடத்தப்பட்டது.

வடபகுதியிலுள்ள சகல தபாற்கந்தோர்களின் உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவுக்கு வடபகுதி தபால் அத்தியட்சகர் திரு எம் நடராசா தலைமைவகித்தார். அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்க யாழ். கிளையின் உபதலைவர் திரு எஸ் எஸ் குலநாயகம் பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்தார். திரு எஸ் பி ஞானப்பிரகாசம். திரு ஐ நடராசா, திரு எம் அம்பலவாணர் உட்படப் பலரும் பாராட்டு வழங்கினர் திரு ஆர் ஸ்ரீநிவாசன் நன்றியுரை கூறினார்.

---

### புதுக் கோபுரத்தில் பொலிவாயே!

— அரியாலையூர் வே. ஐயாத்துரை —

இசையாலெழுந்த யாழ்மா நகர்க்கு
எழிலூட்டு மின்ப இறையோனே!
திசையாவு முன்றன் அருள்நாடிக் கூடத்
திறமான சித்தி புரிவோனே!
அசையாத பக்தி அடியார்கள் நித்தம்
அணிநின்று ஏத்தும் அமரோனே!
இசைஞான மூட்டு முனியப்ப ரென்று
இதமுற் றழைக்கும் பெருமானே!

புலிமீ தமர்ந்து புதுமை பொலிந்து
பொருளாகி நிற்கும் முனியப்பா!
வலிதாய சக்தி வடிவாகி நின்று
வரமே வழங்கும் மறையோனே!
சலியாத பக்திக் குயர்வான சுத்த
தலமீந்த மூத்த தலைவோனே!
பொலிவான நல்ல கலைஞான மூட்டுப்
புதுக்கோ புரத்திற் பொலிவாயே!

தஞ்சம் எனக்கு வேறில்லை யென்று
தாழ்ந்தே வணங்கு மடியார்க்கே
அஞ்சே லெதற்கும் அருளவே னெனச்சொல்
அபயம் கொடுக்கும் முனியப்பா!
விஞ்சும் கலைக்குப் வஞ்சம் இலாது
மேவும் அமைப்பு மிளிர்வோங்கும்
மஞ்சம் நிகர்த்த மாகோபு ரத்தில்
மாவாக நின்று அருள்வாயே!

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கெதிரானவழக்கு

# 25 ஆயிரம் ரூபா ஆசிரியைக்கு வழங்க கோர்ட் தீர்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் 25,000 ரூபா கோரி இராமநாதன் கல்லூரி ஆசிரியையான திருமதி கமலதேவி சுந்தரலிங்கம்தாக்கல்செய்த மனுவை விசாரணை செய்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம், மனுதாரிக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார்.

மனுதார் சார்பிலும் அவரது கணவர் சார்பிலும், கூட்டாக ஆயுள்இன்சூரன்ஸ் பொலிஸிக்கு மாதத்தவணையில் பணம் கட்டப்பட்டு வந்ததாகவும், உரியகாலத்தில் அல்லது இருவரில் ஒருவர் இறக்கும் பட்சத்தில் 25,000 ரூபா வழங்கப்படுமெனக் கூறப்பட்டதாகவும் ஆயுள் பொலிஸி 65-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வந்ததாகவும் மனுதாரின் கணவர் 67-ம் ஆண்டு ஏப்ரல் 26-ம் தேதி காலமானதாகவும், கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. எதிர் மனுதாரான காப்புறுதிக்கூட்டுத்தாபனம் இரு காரணங்களுக்காக இப்பணத்தை மனுதாருக்கு வழங்க மறுத்தது. முதலாவதாக மனுதாரும், அவரது கணவரும் ஆயுள் பொலிஸியில் சிலமாதங்கள் பணம் கட்டாமல் விட்டுவிட்டார்களென்றும் இதனால் நியந்தனைகளின் படி அப்பொலிஸி காலாவதியாகி விட்டதென்றும். மனுதாருக்கு காப்புறுதிக்கூட்டுஸ்தாபனம் பணம் கட்டவேண்டியதில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. இரண்டாவதாக இந்த நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரணைசெய்து தீர்ப்பளிக்க அதிகாரமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மாவட்ட நீதிபதி தமது தீர்ப்பில் கூறியதாவது:

இது ஒரு கூட்டு இன்சூரன்ஸ் பொலிஸி இப்பொலிஸிக்கான பணம் மனுதாரினதும் அவரது கணவரினதும் சம்பளத்திலிருந்து மாதாந்தம் அவர்கள் முதலாளிமூலம் கழிக்கப்பட்டு வந்தது. மனுதாரும் அவரது கணவரும் ஒருமுதலாளியின் கீழ் வேலை செய்துவந்த காரணத்தால்பணம்கிடைப்பது உறுதியானது. எந்த நேரமும் பணம் பெறக்கூடியதாயிருந்தது. ஆகவே இதுபற்றி எதிர் மனுதார் கவலைகொள்ளத் தேவையில்லை.

எதிர்மனுதாரானகாப்புறுதிக்கூட்டுஸ்தாபனம் மனுதாரின் சம்பளத்திலிருந்து ஆயுள் முடிந்தபின்னரும், பணம் பெற்றுவந்துள்ளது. இது நிலுவைப் பணத்தைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். 67 மே, ஜூன், ஜூலை ஆகிய மூன்றுமாதத்திற்கும் இப்படியான பணம் பெறப்பட்டுள்ளது. ஆதலால் இப்பொழுது 5மாதத்திற்கான பணம் மட்டுமே நிலுவையாக உள்ளது.

இந்த மாதங்களுக்கான பணம் செலுத்தப்படாத தற்குரிய ஒரே காரணம். எதிர் மனுதார், பணம் கோரும் பத்திரத்தில் மனுதாரின் பெயரைச் சேர்க்கத் தவறியதேயாகும். ஆகவே இத்தவறு முழுக்க முழுக்க எதிர்மனுதாருடையதாகும். மனுதாரரின் பெயர் பணம் கோரும் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தால், மாதாந்தபணம் கட்டப்பட்டிருக்கும்.

எதிர் மனுதாரரின் யாழ்ப்பாணக்கிளை ஸ்தாபனத்திலும் வேலைசெய்துவருவதால் இந்த நீதிமன்ற பரிபாலன எல்லைக்குள் கம்பனி இருப்பதாலும் இந்த நீதிமன்றத்திற்கு இம்மனுவை விசாரணை செய்து தீர்ப்பளிக்க அதிகாரமுண்டு.

மனுதார் கோரியபடி நான் செலவு தொகையுடன் தீர்ப்பளிக்கிறேன். 5 மாதங்களுக்கு ஆயுள் பொலிஸிக்குக் கட்டப்படாத 636 ரூபாவைத்தவிர்த்து மிகுதிப் பணத்தை வழங்கத் தீர்ப்பளிக்கின்றேன்.

மனுதார் சார்பில் அட்வகேட் எஸ். சூரசங்காரம், அட்வகேட் எஸ். கதிரவேற்பிள்ளையின் உதவியுடனும், புறக்டர் கே. சேனாதிராசாவின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

எதிர் மனுதாரான காப்புறுதி கூட்டுஸ்தாபனம் சார்பில் அட்வகேட் போல் பெரேரா புறக்டர் எஸ் கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## "மக்கள் சேவைக்காகவே அரச ஊழியர்கள்"

குருநகர், ஞாயிறு "பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் உதவியாகவும் விசுவாசமாகவும் நடப்பது அரசாங்க உத்தியோகஸ்தர்களது கடமையாகும். இந்த அரசாங்க செயலகம் இயங்குவதே பொதுமக்களுக்கு நாம் சேவையாற்றுவதற்கேயன்றி உத்தியோகம் பார்ப்பதற்கல்ல".

இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகர யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் 35 வருடம் ஆரசசேவையாக் கடமையாற்றித் தமது 53வது வயதில் இளைப்பாறிச் செல்லும் திரு த வல்லிபுரநாதனைப் பாராட்டு முகமாக கச்சேரி ஊழியர்களால் நடத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"முந்திய காலங்களில் பொது மக்களுக்கும் அரசாங்க அதிபர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. பொதுமக்களின் நெருங்கிய தொடர்புடையவர்களாக இந்த ஆராச்சி பதவிவகிப்பவர்களே இருந்து வந்திருக்கின்றனர். இப்போதும் சில பகுதிகளில் இவர்கள்தான் அரசாங்க அதிபருக்கும் பொதுமக்களுக்கும் பாலமாக அமைந்திருக்கின்றனர். பொது மக்களிடமிருந்து நேரடியான கருத்துக்களை அதிபருக்கு கூறுவது இவர்களின் கடமையாகின்றது. இவர்களை நம்பித்தான் சில பாமர மக்கள் அதிபருக்கு முறையீடுகளைக் கொடுக்கின்றனர்".

## இன்றைய பலன்

ஆனி மாதம் 21-ந் திகதி (5-7-71)

மேஷம்- ஒடும்ப வழியால் மனதிற்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும். சிறப்பான தினம்

ரிஷபம்- அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும். சிறிய விடையத்திற்குக்கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள்.

மிதுனம்- இலட்சியப் பாதையில் வெற்றிநடை போடுவீர்கள், உயர்வட்டத்தின் அன்பும் அவசியம் கிடைக்கும். பதவிஉயர்வுக்கும் இடமுண்டும்

கடகம்- ஒளி மரபும் வாழ்க்கை உறவினர்களுடனும் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம் பொன்னான தினம்

சிம்மம்- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், சிலருக்குப் பதவி உயர்வும் ஏற்படலாம். நீண்டநாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்

கன்னி- வாய்வுக்கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம், உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும், தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு.

துலாம்- அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அடக்கம் விரும்பத்தக்கது.

விருச்சிகம்- குடும்ப நலனில் புதிய உற்சாகம் பிறக்கும். உறவு முறைகளில் அபிவிருத்தி காணப்படும், அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்

தனுசு- பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள். இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும். மனமுவந்து எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டிய சந்தர்ப்பம் உருவாகலாம்.

மகரம்- பொறியியலாளருக்குப் பொன்னான தினம். புகழும் பெருமும் குவியத்தக்கான சந்தர்ப்பமுண்டு. பொதுவாகத் தொழிலில் வெற்றியுண்டு

கும்பம்- புத்திரவழியாக் புகழ் வந்துசேரும். வெளியூர் பயணமும்உண்டு. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும்

மீனம்- முக்கியமான விடயங்களை இன்று பின்போடவும், உள்வீட்டிலேயே உளவுவேலை நடைபெறலாம். உஷார்நிலை விரும்பத்தக்கது

சோதிடக் கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

## மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், திங்கள் அராலி மேற்கு சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் 80 ஓவர்களைக் கொண்ட நொக்கவுட் சுற்றுப்போட்டியில் இதுவரை நடந்த கால் இறுதிப் போட்டிகளில் பின்வரும் கோஷ்டியினர் வெற்றியீட்டியுள்ளனர்.

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம், அராலி கிழக்கு விளையாட்டுக் கழகத்தை 35 ஓட்டங்களாலும் அராலி மேற்கு இந்து இளைஞர் சங்கத்தினர் சங்கரத்தை இளைஞர் ஒற்றுமைக் கழகத்தை 40 ஓட்டங்களாலும், பண்டத்தரிப்பு கிறிஸ்து இளைஞர் சங்கத்தினர் தொல்புரம் கென்னடி விளையாட்டுக் கழகத்தினரை 32 ஓட்டங்களாலும் அராலி வடக்கு சில்வஸ்டார் விளையாட்டுக்கழகத்தினர் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரை 79 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியுள்ளனர்.

அரை இறுதிப்போட்டிகள் இந்தவார இறுதியில் நடைபெறவுள்ளன.

## வ. மா. ஆ. சங்க நிர்வாகிகள்

அரியாலை, ஞாயிறு வடமாகாண ஆசிரியசங்கத்தின் புதிய வருடநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சகுணரத்தினம். உபதலைவர்கள்: திரு வி ஆர் நடராசா, திரு சே தனபாலசிங்கம். செயலாளர்: திரு எம் பத்மநாதன். உபசெயலாளர்: திரு கு ஏபிரகாம்லிங்கன். பொருளாளர்: திரு வி எஸ் சுப்பிரமணியம். நூல்நிலையப் பொறுப்பாளர் திரு வி ரகுநாதமுதலியார்.


கலாநிலைய 'லெட்டர் பாட்' மிகவும் குறைந்த விலைகளில் தரமான கடதாசியில்

'ஈழநாடு' வர்த்தக அச்சகப் பகுதி யாழ்ப்பாணம்.


## "எல்லாவற்றுக்கும் அரசையே நம்பியிருக்கக் கூடாது"

நெடுந்தீவு, ஞாயிறு "நாம் எத்துறையிலும் முன்னேறுவதற்கு எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தையே நம்பி இருக்காது. சுயமுயற்சியின்மூலம் முன்னேறவேண்டும்."

இவ்வாறு நெடுந்தீவில் இரண்டாவது கரபந்தாட்ட மைதானத்தை திறந்து வைத்துப் பேசிய நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு. அ. த. அம்பலம் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் "விளையாட்டுத்துறை அமைச்சின் அன்பளிப்பான இக்கரபந்தாட்டத்துக்குரிய வலையையும் பந்தையும் உங்களிடம் கையளிக்கும்போது பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதேவேளையில் அரசாங்கத்தையே எல்லாவற்றுக்கும் நம்பி இருக்காது இப்பந்து உடைந்தபின் விளையாட்டை நிறுத்திவிடாது உங்களுடைய சுயமுயற்சியோடு பந்துகளை வாங்கிதொடர்ந்து விளையாடவேண்டும்" என்றார்.

நெடுந்தீவு காரியாதிகாரி திரு. ஏ. சி. செபநாயகம் பேசுகையில் "எமது வாலிபர்களின் பொழுதுபோக்கு நேரங்களை வீணாக்காது பிரயோசனப்படுத்துவதற்காகவே எமது அரசாங்கம் விளையாட்டுத்துறைக்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கிறது. இதனால் எமதுவாலிபர்கள் உடல் உறுதியையும் பரந்த நோக்கையும் கொண்டவர்களாக வாழலாம்" என்று கூறினார்.

## அரைநாள் விடுமுறை

கோட்டை ஞாயிறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சில நியந்தனையின் பேரில் அரைநாள் விடுமுறை கொடுப்பதற்கு பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சு முடிவு செய்துள்ளது. சாப்பாட்டுநேரத்துக்கு விடப்படும் ஒரு மணி நேரத்தைத் தவிர்த்து 3 மணி நேரம் வேலைசெய்திருந்தால் விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் ஒருவருக்கு அரைநாள் விடுமுறை அளிக்கப்படும், இந்தவிடுமுறை காலை 8 மணிக்கும் பிற்பகல் 3-30க்குமிடையில் எடுக்கப்பட வேண்டும்.

புதிய வேலை நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டதனாலேயே இம் முடிவெடுக்க வேண்டி ஏற்பட்டதாக அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விரிவுரையாளராக நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய வர்த்தக ஆசிரியர் திரு. இ. சிவஞானம் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலைக்கு முழுநேர விரிவுரையாளராக அமர்த்தப்பட்டுள்ளார். இவர் முன்பு கோப்பாய் கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தது குறிப்பிடத்தக்கது.

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள் பண்ணை "வி" கோயில் இருக்கும் ஜே. எம். குறூஸ் என்பவரால் கே. கே எஸ் வீதியில் ஒரு சிறப்பு கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## குடிநீர் விநியோகம் ஆரம்பம்

வேலணை, ஞாயிறு புங்குடுதீவு மகாவித்தியாலயமாணவர்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் ஆரம்பவிழா இம்மாதம் 10ம் திகதி நடைபெற இருக்கிறது.

இவ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து மாணவர்கள் அனுபவித்துவரும் குடிநீர்க்கஷ்டத்தைத் தீர்க்குமுகமாக கொழும்பு பிரபல வர்த்தகரும், கொடையாளருமான திரு. நா. க. மயில்வாகனம் இருபத்தையாயிரம் ரூபா செலவில் இச்சைக்கரியத்தை நிறைவேற்றியுள்ளார்

இப்பாடசாலையில் இருந்து ஒருமைல் தூரத்தில் இருக்கும் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை வளவில் தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து குழாய்மூலம் இப்பாடசாலைக்கு நீர்விநியோகம் செய்யப்பட இருக்கிறது.

## விளையாட்டுப் பயிற்சி வகுப்பு

பருத்தித்துறை, ஞாயிறு இம்மாதம் 14ம், 15ம் திகதிகளில் உதைப்பந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், நீச்சல் இதர விளையாட்டுகள் ஆகியவற்றில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பயிற்சியளிக்கப்படவுள்ளது. வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கான இப் பயிற்சி வகுப்புகளை விளையாட்டமைச்சின் உத்தியோகத்தர் மேற்கொண்டு நடாத்த விருக்கின்றனர்

வடமராட்சி விளையாட்டுத்துறை அதிபர் திரு எஸ். தியாகராசா இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

# "வில்லுப்பாட்டுக்கு இலக்கிய அந்தஸ்து அளித்தவர்"

வெள்ளவத்தை, ஞாயிறு

"ஈழத்தின் தமிழ்க்கவிதை யுலகிற்குப் புத்துயிரளிக்கவும் 'குறும்பா'வைப்போலப் புதுக்கவிதைகள் சமைக்கவும் எங்கள் மத்தியில் மஹாகவி இருக்கிறார் என்று இறுமாந்திருந்தோம். ஆனால் இவ்வளவு விரைவில் அவர் எம்மை விட்டுப்பிரிந்து விடுவார் என்று நாம் கனவிலும் கருதவில்லை. மிகச் சமீபத்தில் மஹாகவியின் 'புதியதொருவீடு' நாடகம் பற்றிய விமர்சனக் கருத்தரங்கில் எம்முடன் கலந்துகொண்டு தமது கருத்துக்களை நறுக்குத்தெறித்தாற்போலச் சொன்னார். இளைஞர்களுடன் இலக்கியச் சர்ச்சைசெய்வதில் தனிப் பெருமையடைவதாகத் தெரிவித்தார். மகாகவியின் இலக்கிய சிருஷ்டிகள் 'புதிய கோணத்தில் உருவாக்கப் பட்டவை. அவரது 'கோடை' என்ற கவிதைநாடகம் ஈழத்தின் பல பாகங்களிலும் அரங்கேற்றப்பட்டு சிறந்த விமர்சனத்தைப் பெற்றது. 'கண்மணியாள் காதை' என்ற வில்லிசைக் காவியம் மூலம் வில்லுப் பாட்டுக்கு இலக்கிய அந்தஸ்து அளித்தவர் மஹாகவி. அவரதுமரணம் ஈழத்து இலக்கிய உலகிற்கு மாபெரும் இழப்பு."

இவ்வாறு கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம் வெள்ளவத்தையில் நடாத்திய மாதக்கருத்தரங்கிற்குத் தலைமைவகித்த நெல்லை க. பேரன் பேசுகையில் கூறினார்.

திரு. ஐ. சாந்தன் திரு. எஸ். வன்னியகுலசிங்கம் திரு. ஏ. இராசேந்திரன் ஆகியோருட்பட பலரும் பேசினர்.

## தி.மு.க. முஸ்லிம் லீக் உறவு நீடிக்கும்

சென்னை, ஜூலை 4

"மதுவிலக்கு ரத்து குறித்து, முதல் அமைச்சர் மறுபரிசீலனை செய்யவேண்டும். கருணாநிதி 'நிதிக்காக கருணை'யை விட்டுவிடக் கூடாது. இந்த பிரச்னையை இலாபநஷ்ட நோக்கோடு பார்க்கக் கூடாது. மக்களுக்கு ஏற்படும் நன்மையைத் தான் பார்க்கவேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு இந்த பிரச்னையை முதலமைச்சர் மறு பரிசீலனை செய்யவேண்டும்".

இவ்வாறு தமிழ் சட்டமன்ற மேல் சபையில் நடைபெற்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது, முஸ்லிம் லீக்கட்சியைச் சேர்ந்த ஜனாப் அப்துல் வகாப் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

மதுவிலக்கு ரத்து தவிர மற்ற கொள்கைகளை முஸ்லிம் லீக் கட்சி பாராட்டி வருகிறது. நாம் சமுகத்தின் பெரும்பாலான கொள்கைகளை ஆதரிக்கிறோம். ஒரு சில கருத்துக்களை எதிர்க்கும் போது நல்ல நோக்கத்துடன் எதிர்க்கிறோம். நாங்கள் அரசுக்கு எதிரான கருத்தைத் தெரிவித்தாலும், கூட்டணியில் இருந்து விலகமாட்டோம்.

"நபிகள் நாயகம் பிறந்த மண்ணில்கூட மது விலக்கு இல்லை" என்று முதலமைச்சர் கூறினார். நான் விசாரித்த அளவில் மெக்காவிலோ, நபிகள் பிறந்த அராபிய நாட்டிலோ மதுவிலக்கு ரத்து இல்லை. அங்கு மதுவிலக்கு அமுலில் இருக்கிறது.

முதலமைச்சர்- நபிகள் பிறந்த இடம் என்று நான் கூறியது அவர் பிறந்த அறையிலே மட்டுமல்ல அவர் எல்லா இடங்களிலும் இருக்கிறார். முஸ்லிம்கள் மட்டுமல்ல எங்கள் இதயத்திலும் இடம்பெற்று இருக்கிறார். நான் குறிப்பிட்டது பாகிஸ்தானில் மதுவிலக்கு இல்லை. மற்ற இஸ்லாமிய நாடுகளில் இல்லை. ஏன் முகமது கோயா பதவியில் உள்ள கேரளாவில் கூட மதுவிலக்கு இல்லை.

அப்துல்வகாப்- கேரளாவில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட நேரத்தில் முஸ்லிம் லீக் எதிர்ப்பு தெரிவித்தது. இதற்கான சட்டம் சட்டசபையில் கொண்டுவரப்பட்டபோது வெளிநடப்பு செய்திருக்கிறோம். ஆனால் இந்த காரணங்களுக்காக கூட்டணியில் இருந்து விலகிவிடமாட்டோம். எங்களுக்கும், தி மு க கழகத்துக்கும் உள்ள உறவு தொடர்ந்து நீடிக்கும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

புதிய காகித ஆலைக்கு

## கேள்விகள் கோரப்பட்டுள்ளன

கோட்டை, ஞாயிறு

கிழக்கிலங்கைக் காகிதக் கூட்டுத்தாபனம் எல்பிலிபிற்றியாவில் காகித ஆலை நிறுவுவதற்கு வேண்டிய உபகரணங்களையும் காகித கூழையும் கொடுத்துதவும் பொருட்டு உலகரீதியில் டெண்டர்கள் கோரியுள்ளது. இவை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து கார்த்திகை 30-ம் திகதி வரை கோரப்படும். இதன் மூலம் காகித உற்பத்தியைப் பெருக்கி 15,000 தொன் நிறையுள்ள காகிதத்தை உற்பத்தி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு வேண்டிய மூலதனத்தில் ஒருபகுதியை ஜேர்மன் சமஷ்டிக்குடியரசு இலங்கைக்கு [illegible] கொடுத்துதவ முன்வந்துள்ளது. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சை, வெளிநாடுகளிடம் இருந்து இவற்றைப் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யும்படி இக்கூட்டுத்தாபனம் கேட்டுள்ளது.

## தாலிக் கொடியை பறித்து ஓடினாராம்

யாழ்ப்பாணம், திங்கள்

தன்னந்தனியாக சென்றுகொண்டிருந்த பெண்ணை வழி மறித்து தாலிக்கொடியை பயமுறுத்தி பறித்துக்கொண்டு ஓடினாராம். யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நீர்வேலியைச் சேர்ந்த கனகர் பூரணம் என்ற பெண்ணின் தாலிக்கொடியை பறித்துக்கொண்டு ஓடியதாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

மரவள்ளிக்கு

## மேற்கு நாடுகளில் கிராக்கி

கோட்டை, ஞாயிறு

மரவள்ளி உற்பத்தியின் மூலம் ஒருவர் மாதம் 1,000 ரூபா வருமானம் பெறமுடியும். இதன் மூலம் பெறப்படும் பசைக்கு மேற்குநாடுகளில் மிகுந்த கிராக்கி உள்ளது. இதனால் அந்நிய செலாவணியை அதிகளவில் பெற முடியும்.

இவ்வாறு இலங்கைக் கைத்தொழில் நிறுவத்தினர் கண்டுபிடித்துள்ளனர். மேலும் இவ்உற்பத்தியில் ஈடுபட முன்வரும் இளைஞர்களுக்கு வேண்டிய வசதிகளையும், உதவிகளையும் செய்ய ஒரு கைத்தொழில் நிறுவனம் முன்வந்துள்ளது. இலங்கை முழுவதிலும் இதுபோன்ற புதிய பண்ணைகளை ஸ்தாபிப்பதினால் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க முடியும் எனவும் இந்நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். இதனை உற்பத்தி செய்து ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தில்

## விருத்தியடைய அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், திங்

விவசாயத்துறையில் மக்கள் அபிவிருத்தியடையும் பொருட்டு அரசாங்கம் அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றது. அடையாள அட்டைகள் மூலம் பலவிதமான சலுகைகளை விவசாயிகள் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது.

இவ்வாறு திரு ரா சுப்பிரமணியம் [illegible] விவசாயக் குழுவின் பொதுக் கூட்டத்தில் பேசியபோது கூறினார்.

கடன் உழவு இயந்திரம் விதைநெல்லு உப உணவு விதை நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய வசதிகளை தக்க ஆதாரத்துடன் அடையாள அட்டை காட்டி பயிர்ச்செய்கைக் குழுமூலமும் கூட்டுறவுச் சங்கங்களில் பெற முடியும்' எனவும் அவர் கூறினார். அடையாள அட்டையினால் கிடைக்கும் பலன் பற்றி பலர் பேசினார்கள்.

(கு வி ம)

## பதில் நீதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

நயினாதீவு வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நீதிமன்றத்தில் திரு எஸ். கனகரத்தினம் பதில் நீதிபதியாக கடமை யாற்றுவார்.

## யாழ் 1-ம் வட்டார வாலிபர்கள் புகார்

குருநகர், ஞாயிறு

யாழ்நகர எல்லைக்குள் இருக்கும் தேநீர்க்கடைகளில் தண்ணீர் கலந்த பசுப் பால் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் கூடுதலான விலையைக் கொடுத்தும் சுத்தமான பால் பெற முடியவில்லையெனவும் இதற்கு நடவடிக்கையெடுத்து ஆவன செய்யவேண்டுமெனவும் கோரும் கடிதமொன்றை யாழ்நகர 1-ம் வட்டார வாலிபர்கள் பலர் யாழ்நகர முதல்வர் திரு அல்பிரட் துரையப்பாவிற்கு அனுப்பியுள்ளனர்.

## 'பழமரங்களை நாட்டுக'

பருத்தித்துறை, ஞாயிறு

"பூ மரங்களுக்குப் பதிலாக, மக்களுக்கு அதிக தேவைப்படும் பழமரங்கள், வெங்காயம், மிளகாய் ஆகியவற்றை நாட்டும் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது நிதி நெருக்கடி காரணமாக அரசாங்கம் உணவுப்பொருட்களை இறக்குமதி செய்யமுடியாது தவிக்கும் இந்நிலையில் இவ்வுணவுற்பத்தியையும், உப உணவு உற்பத்தியையும் பெருக்கவேண்டியது தேசாபிமானமுள்ள ஒவ்வொருவரின் கடமையுமாகும்".

இவ்வாறு வடமராட்சி வடக்கு. கிழக்கு காரியாதிகாரி திரு மூ. தம்பிமுத்து, வடமராட்சி விவசாய அபிவிருத்திக் குழுவின் செயலாக்கும் திட்டக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார். வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிப்பதற்காக, பரிசில்கள் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் அதிபர் மாக்கோஸ்

# 53 லட்சம் டாலர் நஷ்டஈடு கோரி 'டைம்ஸ்' மீது வழக்கு

மணிலா, ஜூலை 4

பிலிப்பைன்ஸ் அதிபர் மாக்கோஸ் "டைம்ஸ்" சஞ்சிகைக்கு எதிராக மான நஷ்டவழக்குத் தாக்கல் செய்திருக்கிறார் 53 லட்சம் டாலர் கோரி இந்த வழக்கைத் தாக்கல்செய்துள்ளார். மணிலாவிலுள்ள இந்த பத்திரிகையின் காரியாலயம் இப்போது சீல்வைக்கப்பட்டுள்ளது.

# 'விவேகானந்தர்வழியை பின்பற்ற வேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அறிவும் ஆற்றலுமிக்க இளைஞர்கள் தான் ஒரு நாட்டின் முதுகெலும்பு. அவர்கள் விவேகானந்தர் போன்ற ஆத்மீகப் பேரறிஞர்களின் நூல்களைப் படித்து அவர்கள் கூறிய கருத்துக்களை மனதில் ஏற்று அவர்கள் வழியை பின்பற்ற வேண்டும்"

இவ்வாறு சாவகச்சேரி றோட்டிஸ் அக்கடமியில் சுவாமி விவேகானந்தர் தினம் கொண்டாடியபோது திரு. ஆ கோடீஸ்வரன் தலைமையுரையில் கூறினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

சுவாமி விவேகானந்தரும் ஆரம்பத்தில் கடவுள் நம்பிக்கை வைப்பதில் அவரின் குருவான சுவாமி இராமகிருஷ்ணரிடம் தனது சந்தேகத்தை தெரிவித்தார். ஈற்றில் அனைத்துலக மக்களுக்கும் கடவுள் நம்பிக்கையை துலாம்பரமாக விளக்கி ஆத்மீக வாழ்வு வாழ்ந்து எல்லோரையும் நல்வழிப்படுத்தினர்.

[கு. வி. ம.]

# பேராதனைப் பல்கலைக்கழகம் இ. ப. கழகமாக இயங்கும்

## உயர்கல்விக்குழு சமர்ப்பித்துள்ள சிபார்சுகள்

கோட்டை, ஞாயிறு

உயர்தரக் கல்வி சீர்திருத்தம்பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவினர் தமது சிபார்சுகளை சமர்ப்பித்துள்ளனர். இச் சிபார்சின்படி உயர்தரக் கல்வி முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குழு சிபார்சு செய்துள்ள விபரங்கள் வருமாறு:

நாடு முழுவதற்கும் ஒரே பல்கலைக்கழகம் நிறுவப்படும். கல்லூரிகளில் கல்வி பயில வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்

பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக் கழகமாக இயங்கும். இதைவிட கொழும்பு வித்தியோதய வித்தியாலங்கார கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு பயன் தரத்தக்க விதத்தில் பாடங்கள் போதிக்கப்படும்.

விஞ்ஞானம் கலைப்பாடங்கள் போதிப்பதுபற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

தொழிலாளரும் கல்வி வசதிபெறும் பொருட்டு மாலைநேர போதனை வகுப்புகள் நடாத்தப்படும். மாணவர்களுக்கு ஆலோசனை கொடுப்பதற்கு வழிகாட்டுக் குழுவும் நியமிக்கப்படும் பயிற்சி பெற்றோருக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுப்பதற்கு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்படும்.

# அரசியலமைப்பே...

1-ம் பக்கத் தொடர்ச்சி

சியலமைப்புக்கே உயரிய ஸ்தானம் அளிக்கப்படும் என்று டாக்டர் கொல்வின் சொன்னார், சட்டங்களை தமிழில் மொழிபெயர்ப்பதற்கு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுவது பற்றி நிறைவேற்றப்பட்ட 26வது அடிப்படைத் தீர்மானம் வருமாறு:

சட்டவாக்கங்களை சிங்கள மொழியில் வெளியிடுவதற்கும் பொறுப்பளிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும்.

மிக முக்கியமான சட்டவாக்கங்கள் (அட்டவணைப் படுத்தப்பட வேண்டியன) சிங்களமொழியிலும் தமிழ்மொழியில் மொழிபெயர்ப்பிலும் வெளியிடப்படும்வரை அல்லது குறிப்பிட வேண்டிய ஒரு காலம் வரை இவற்றுள் எக்காலம் குறைந்ததோ அது வரை நீதிமன்றத்திற்கு உகந்தது என [illegible] அமைச்சர்களும் ஏதேனும் ஒழுங்கு விதிக்கு அமைய நீதிமன்ற மொழி சார்பாக இப்போதிருந்துவரும் ஒழுங்குகள் தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்.

29-வது அடிப்படைத் தீர்மானம் தொடர்பாக டாக்டர் கொல்வின் விளக்கம் தெரிவிக்கையில்; பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் நீதியரசர் நியமனம்செய்யப்படும் முறையை எடுத்துக் காட்டினார்.

## முதலாம் வருட நினைவுதினம் 6-7-71

திரு ச. வ. தாவீதுப்பிள்ளை

இவ்வுலகில் என்னை நேசித்தவர்களே
மறுஉலகில் உள்ள என்னை மறவாதீர்கள்.

திரு ச. வ. தாவீதுப்பிள்ளை அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்த நினைவு தினமாகிய 6-7-71-ல் கட்டைக்காடு புனிதை கப்பலேந்திமாதா ஆலயத்திலும் கரம்பன் திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்திலும் யாழ்ப்பாணம் புதுமைமாதா ஆலயத்திலும் திவ்விய பூசைப் பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சகோ. கன்னியர்கள், ஏனைய கிறிஸ்தவர்கள் யாவரையும் இவரது ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டுகின்றோம்.

துயரால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

கட்டைக்காடு
முள்ளியான், 2628